Nallur Branch Library

Registered as a Newspaper பக்கங்கள்: 6 விலை ரூபா 5.00

# ஈழநாதம்

THE EELANAATHAM மக்கள் தினசரி PEOPLES DAILY

நாதம் 5 திருவள்ளுவர் ஆண்டு 2025 ஆனி 02 16 - 06 - 94 வியாழக்கிழமை ஓசை 118

## அனுமதி பெறப்பட்ட நாய்களும் தெருவில் திரிந்தால் பிடிக்கப்படும்

யாழ். மாநகர சபை வீதிகளில் திரியும், மாநகர சபையினால் அனுமதி வழங்கப்பட்ட வளர்ப்பு நாய்களும், கட்டாக்காலிகளாக விடப்பட்டால் கட்டாக்காலி நாய்களாகக் கணிக்கப்பட்டு பிடிக்கப்பட்டு அழிக்கப்படும் என்று யாழ். மாநகரசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் எச்சரித்துள்ளார்.

யாழ். மாநகரசபை எல்லைக்குள் நாய்கள் வளர்ப்போர் அவைகளைத் தத்தமது வீட்டில் கட்டி வளர்க்க வேண்டும் என அவர் தெரிவித்துள்ளார். வளர்ப்பு நாய்கள் வீதிகளில் திரிவதால் போக்கு (6 ஆம் பக்கம் பார்க்க)

# பாதுகாப்பு அமைச்சின் செயற்பாட்டில் ஆயுதப்படை அதிகாரிகள் அதிருப்தி

## புலிகளுக்கு எதிராகப் போரிட ஒருங்கிணைந்த தலைமைதேவையாம்

(கொழும்பு)

பாதுகாப்பு இராஜாங்க அமைச்சராக இருந்த ரஞ்சன் விஜயரட்ணா கொல்லப்பட்டபிறகு படையினர், மற்றும் பொலிஸ் இலாகாவின் நடவடிக்கைகளுக்கு அரசின் அங்கீகாரம் கிடைக்கவில்லை எனப் பாதுகாப்பு அமைச்சிற்குப் பொறுப்பாக உள்ள அரசியல்வாதிகள் மீது முப்படை உயர் அதிகாரிகள் குற்றம் சாட்டியுள்ளனர். விடுதலைப்புலிகளுக்கு எதிராகச் சிறப்பாகப் போரிடவேண்டுமெனில் முப்படைகளினதும் பொலிஸ் படையினரின் ஒருங்கிணைப்பும் அவசியம் எனவும் வற்புறுத்தியுள்ளனர். இதேசமயம் பாதுகாப்பு அமைச்சின் முழுப் பொறுப்பும் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவிடம் இருப்பது குறிப்பிடத்தக்கது.

பாதுகாப்பு படையினர் மற்றும் பொலிஸ் இலாகா உயர் அதிகாரிகளின் மாதாந்த மாநாடு ஒன்றில் மேலும் கூறப்படுகையில், முப்படைகளினதும் ஒருங்கிணைந்த நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டாலேயே நிலைமையைக் கையாள முடியும் என்றும், முப்படைகளின் தளபதிகள் மற்றும் பொலிஸ்மா அதிபர் ஆகியோர் பாதுகாப்பு அமைச்சு உயர் அதிகாரிகளுடன் தகுந்த பேச்சுவார்த்தை நடத்தி பாதுகாப்பு படைகளின் ஒருங்கிணைந்த தலைமை ஒன்றை ஏற்படுத்துவதற்கு வகை செய்யவேண்டும் என்றும் அவ்வாறு செய்யப்படும் பட்சத்திலேயே விடுதலைப்புலிகளுக்கு எதிராக சிறப்பாக போரிட முடியும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் புலனாய்வு மற்றும் துணைப்படை அணிகளின் பொறுப்பதிகாரிகளும் கூட போர் நடவடிக்கைகளை திட்டமிட்டு மேற்கொள்ளவும் விளைவுகளை கூட்டாக பொறுப் பேற்கவும் பாதுகாப்பு படைகளின் ஒருங்கிணைந்த

## ஜே. வி. பியை அழித்தமை குறித்து

## புலிகள் என நினைத்து ஊர்காவல்படை மீது சூடு

### இரு ஊர்காவல் படையினா பலி

பொலநறுவை மாவட்டத்திலுள்ள ஜயந்திபுர காட்டுப் பகுதியில் ஊர்காவற் படையினர் இருவரும் வேறு ஒருவரும் இராணுவத்தால் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

கடந்த 11ஆம் திகதி நடைபெற்ற இச்சம்பவம் குறித்து தெரிவித்த சிறிலங்கா பாதுகாப்பு வட்டாரங்கள், மேற்படி மூவரும் காட்டுப் பகுதிக்குள் அனுமதியின்றி வேட்டையாடச் சென்றனர் எனவும், இப்பகுதியில் இராணுவத்தினர் புலிகளுக்கு எதிரான இராணுவ நடவடிக்கையை மேற்கொண்ட போது தவறுதலாக இவர்கள் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது,

## முதல் தொகுதி அகதிகளை சுவிஸ் திருப்பி அனுப்பியது

(கொழும்பு)

சிறிலங்காவும, சுவிட்சர்லாந்தும் செய்து கொண்டுள்ள உடன்படிக்கை ஒன்றின் கீழ் சுவிட்சர்லாந்தில் அகதிகள் அந்தஸ்து மறுக்கப்பட்டுள்ள சிறிலங்காப் பிரஜைகளில் ஒரு தொகுதியினர் நேற்று திருப்பி அனுப்பப்பட்

னால் வழங்கப்படவுள்ளது.

புனர்வாழ்வு அதிகார சபையின் தலைவர் இது தொடர்பாக மேலும் கூறுகையில், இந்த ஆண்டு முடிவிற்கு முன்பாக முந்நூறுபேர் இவ்வாறு திருப்பி அனுப்பப்படவுள்ளதாகவும், அகதிகள் அந்தஸ்து கோரியுள்ள சுமார் 35,000

## வீரச்சாவு



கப்டன் சுமந்திரன்



2-ம்லெப். ஆனந்தன்

திருகோணமலை மாவட்டத்தில் கடந்த 10-ம் திகதி மாலை 4.10 மணியளவில் காட்டிற்குள் பிரவேசித்த சிறிலங்கா இராணுவத்தினருக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே எதிர்பாராத விதமாக இடம்பெற்ற மோதலின் போது விடுதலைப்புலிகள் போராளி ஒருவர் வீரச்சாவு அடைந்தார்.

கப்டன் சுமந்திரன் (சந்தி

திட்டமிட்டு மேற்கொள்ளவும் விளைவுகளை கூட்டாக பொறுப்பேற்கவும் பாதுகாப்புப் படைகளின் ஒருங்கிணைந்த தலைமை அமைப்பு தேவை என்பதை வலியுறுத்தியுள்ளனர்.

இதேவேளை பாதுகாப்பு அமைச்சர் பொறுப்பையும்

(6 ஆம் பக்கம் பார்க்க)

டுள்ள சிறிலங்காப் பிரஜைகளில் ஒரு தொகுதியினர் நேற்று திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். இவர்கள் சிறுசிறு குழுக்களாக திருப்பி அனுப்பி வைக்கப்படவுள்ளனர். இவ்வாறு திரும்புவோருக்கு தலா பத்தாயிரம் ரூபா வீதம் சுவிட்சர்லாந்து அரசாங்கத்தி

திருப்பி அனுப்பப்படவுள்ளதாகவும், அகதிகள் அந்தஸ்து கோரியுள்ள சுமார் 35,000 இலங்கையரில் 12,000 பேருக்கு மட்டுமே அவ் அந்தஸ்து வழங்கப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது ஏனையோர் சிறுசிறு குழுக்களாக விரைவில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

கள் போராளி ஒருவர் வீரச்சாவு அடைந்தார்.

கப்டன் சுமந்திரன் (சந்திரன் தயாபரன் திருகோணமலை, தறபோதைய முகவரி சடையர் காடு தோட்டம், வேம்பொடுகேணி, பளை) எனும் போராளியே இம்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# ஜே. வி. பியை அழித்தமை குறித்து கவலைப்படும் இராணுவ அதிகாரிகள்

## பதக்கம், பதவி உயர்வுகிட்டாமையால் விரக்தி

(கொழும்பு)

சிறிலங்கா ஆயுதப் படைகளில் பதவி உயர்வுகள் மற்றும் பதக்கம் வழங்கல்கள் தொடர்பாக மூத்த அதிகாரிகள் மட்டத்தில் பெரும் அதிருப்தி நிலவுவதாக கூறப்படுகிறது.

பதக்கம் வழங்கி கௌரவிப்பதற்காக அண்மையில் தெரிவு செய்யப்பட்ட அதிகாரிகளின் பெயர்ப்பட்டியல் பெரும் சர்ச்சைக்கு உள்ளாகியுள்ளது. பாரிய நடவடிக்கைகளில் உயிராபத்தையும் பொருட்படுத்தாமல் ஈடுபட்ட அதிகாரிகள் ஒரு புறம் இருக்க கொழும்பிலிருந்து கொண்டு இத்தகையவர்களது நடவடிக்கைகளை மேற்பார்வை செய்தவர்கள் பதக்கம் வழங்கப்படுவதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

மேலும் ஜே. வி. பியினரை அடக்கும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட படையினர் இப்போது ஓரங்கட்டப்பட்டுவிட்டதாகவும் குறிப்பாக ஜே.வி.பி தலைவர் ரோகண விஜேவீரவை கைதுசெய்வதற்கு பாடுபட்டவர்கள் கூட ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் அவர்களுக்கான பதவிஉயர்வுகள் மற்றும் கௌரவிப்புகள் மறுக்கப்பட்டுள்ளதாகவும் இராணுவ அதி

(6 ஆம் பக்கம் பார்க்க)

# ஆயிரக்கணக்கானோர் கண்ணீர் சிந்த பேராசிரியர் பூதவுடல் தீயில் சங்கமம்

(யாழ்ப்பாணம்)

தலைசிறந்த கல்விமானும் யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தருமான பேராசிரியர் துரைராசாவின் இறுதி யாத்திரை நேற்று வடமராட்சியில் நடைபெற்றது. இந்த இறுதி யாத்திரையின்இறுதியில் உற்றார், உறவினர்கள் மட்டுமல்லாமல் பேராசிரியரது நண்பர்கள், மாணவர்கள் என்று ஆயிரக்கணக்கான மக்கள் கதறியழ நேற்று நண்பகலுக்குப் பின்னர் பேராசிரியரது பூதவுடல் தீயுடன் சங்கமமாகியது.

வதிரியில் உள்ள பேராசிரியரது இல்லத்தில் வைக்கப்பட்டிருந்த பேராசிரியரது பூதவுடலுக்கு நேற்றுக் காலை முதல் சமயக் கிரியைகள் நடைபெற்றன. சமயக் கிரியைகள் நடைபெற்றுக் கொண்டிருந்த வேளையிலும் பெமளவில் மக்கள் மறைந்த பேராசிரியருக்கு அஞ்சலி செலுத்தினர்.

**பேராசிரியர் இல்லத்தில் மக்கள் கூட்டம்**

நேற்றுஅதிகாலையே பேராசிரியருக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக யாழ். குடாநாட்டின் அனைத்துப் பகுதிகளில் இருந்தும் திரண்டு வந்த மக்கள் கூட்டம் பேராசிரியரது இல்லத்தில் கூடியது. யாழ். பல்கலைக்கழகத்தின் கல்விமான்கள், மாணவர்கள் மற்றும் பாடசாலைகளின் மாணவர்கள், அரச, தனியார் நிறுவன ஊழியர்கள் என்று அனைத்துத் தரப்பு மக்களும் பேராசிரியருக்கு இறுதி அஞ்சலி செலுத்துவதற்காக ஆயிரக்கணக்கில்

(6ஆ. பக்கம் பார்க்க)

## இனப்பிரச்சினை தீர்க்கப்படாதவரை

# வடக்கு கிழக்கில் தேர்தலை அனுமதிப்பதற்கில்லை!

## - அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்

இனப் பிரச்சினைக்கு முற்றான அரசியல் தீர்வு காணப்படாத வரை விடுதலைப் புலிகளின் கட்டுப்பாட்டின் கீழுள்ள பகுதிகளில் ஜனாதிபதித் தேர்தல் உட்பட எந்தத் தேர்தலும் நடத்தப்படுவதற்கு அனுமதிப்பதற்கு இல்லை என்று விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் கலாநிதி அன்ரன் பாலசிங்கம் கூறியுள்ளார். அண்மையில் பி. பி. ஸி மற்றும் ராய்ட்டர் செய்தி நிறுவனங்களுக்கு பேட்டியளித்த அவர் மேலும் கூறுகையில்,

இலங்கை அரசுடன் நிபந்தனைகள் எதுவுமின்றிச் சமாதானப் பேச்சு நடத்த தயாராக உள்ளோம் என்று பல முறை கூறிய பின்னரும். சமஷ்டிஅமைப்போ எதுவோ தமிழின மக்களைத் திருப்திப்படுத்தும் தீர்வு ஒன்றை ஏற்க தாம் தயார் என்று இணக்கம் தெரிவித்த பின்னரும், சிறிலங்கா அரசு இராணுவத் தீர்வையே நம்பி போர் முனெடுப்பு நடவடிக்கையில்

(6 ஆம் பக்கம் பார்க்க)

# புலிகளுடன் பேச்சு நடத்த 4நிபந்தனைகள் வற்புறுத்து

(லண்டன்)

சிறிலங்கா அரசாங்கம் விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவதாயின் முன்னர் விதிக்கப்பட்ட நான்கு நிபந்தனைகளின் அடிப்படையிலேயே நடைபெறும் எனவும் இதில் எந்தவொரு மாற்றமும் இல்லை எனவும் லண்டனிலுள்ள சிறிலங்கா தூதுவராலய அதிகாரி ஹேவன் கூரே தெரிவித்துள்ளார்

விடுதலைப் புலிகள் நிபந்தனையற்ற பேச்சுக்களுக்குத் தயார் என மீண்டும் அறிவித்ததைத் தொடர்ந்து இது தொடர்பாக அவரிடம் கருத்துக்கேட்ட போதே இவ்வாறு கூறினார்

பேச்சு நடைபெறுவதற்கு முன் விடுதலைப்புலிகள் சகல நடவடிக்கைகளையும் நிறுத்த

(6ஆம் பக்கம் பார்க்க)

# விசேட படகுச்சேவை

கிளாலி — பூநகரி விசேட படகுச்சேவை நாளை வெள்ளிக்கிழமை வழமையான நேரத்திற்கு நடைபெறும் எனவும் சனிக்கிழமை வழமையான படகுச்சேவை நடைபெறும் எனவும் தமிழீழ அரசியற்துறையினர் அறிவித்துள்ளனர்.

# எமது இனத்தினதும் மொழியினதும் மேம்பாட்டிற்காக பாடுபட்டவர்

## துணைவேந்தர் குணரட்ணம் அஞ்சலி உரை

(யாழ்ப்பாணம்)

''மறைந்த பேராசிரியர் துரைராசா எமது இனத்திலும், மொழியிலும் மிகுந்த பற்றுள்ளவராக வாழ்ந்தார். இதனால் இனத்தினதும் மொழியினதும் மேம்பாட்டிற்காக அவர் அயராது உழைத்தார்'' இவ்வாறு யாழ். பல்கலைக்கழகத்தின் முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் துரைராசாவின் மறைவையொட்டி அவரது இல்லத்தில் நேற்று நடைபெற்ற இரங்கற் கூட்டத்துக்கு தலைமை தாங்கிப் பேசிய யாழ். பல்கலைக்கழகத்தின் தற்போதைய துணைவேந்தர் பேராசிரியர் குணரட்ணம் தெரிவித்தார்.

இக் கூட்டத்தில் அவர் தொடர்ந்து பேசும்போது இரு மாதங்களுக்கு முன்புதான் யாழ். பல்கலைக்கழகம் மட்டுமல்ல யாழ். மாவட்டம் எங்கும் விழாக்கோலம் பூண்டு அவருக்கு மகத்தான

(6ஆம் பக்கம் பார்க்க)

# உற்ற நண்பனை இழந்து வேதனை அடைகிறோம்

## திறந்த பல்கலைக்கழக துணைவேந்தர்

(யாழ்ப்பாணம்)

பல வழிகளிலும் எமக்கு உற்ற நண்பனாகவும், ஆசிரியராகவும், சகபாடியாகவும் திகழ்ந்த ஒருவரை இழந்தமை குறித்து திறந்த பல்கலைக்கழக ஊழியர்கள் சார்பாகவும், மாணவர்கள் சார்பாகவும் ஆழ்ந்த அனுதாபத்தையும், வேதனையையும் தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு திறந்த பல்கலைக்கழக துணைவேந்தர் தயானந்த விஜயசேகரா பேராசிரியர் அ. துரைராசாவின் மறைவு தொடர்பாக வெளியிட்டுள்ள அனுதாபச் செய்தியில் குறிப்

(6ஆம் பக்கம் பார்க்க)

Nallu Branch Library

# வரி விளம்பரம்

## தவறிவிட்டது

12-06-94 அன்று தாண்டிக்குளம் முகாமிலே சோதனை முடிந்து யாழ்ப்பாணம் திரும்பும் வழியில் பூப்புனித நீராட்டு விழாப் படங்கள் பிஸ்கட் பேணியில் அடைத்து வைத்தபடியே தவறிவிட்டன கண்டெடுத்தவர்கள் தயவு செய்து ஈழநாதம் காரியாலயத்தில் ஒப்படைக்கவும். (சி 9806)

## ஏழு தலைமுறைகள்

வெள்ளையர்கள் புரிந்த கொடுமைகளுக்கும் அக்கிரமங்களுக்கும் எதிராக கறுப்பின அடிமைகள் நடத்திய போராட்டத்தையும்; கறுப்பின மக்களின் கலாச்சாரத்தையும் விபரிக்கும் நாவல் விற்பனையாகிறது- வசந்தம், தமிழ்த்தாய் புத்தக சாலைகளில். (8567)

## நினைவுகள் அழிவதில்லை

பாட்டாளி மக்களின் வாழ்க்கையையும் போராட்டத்தையும் கருப்பொருளாகக் கொண்டு படைக்கப்பட்ட கையூர் தியாகிகளின் வீரக்கதை விற்பனையாகிறது- வசந்தம், தமிழ்த்தாய் புத்தக சாலைகளில். (8568)

# 93 ஆயிரம் பேருக்கு நட்டஈடு

(கொழும்பு)

வளைகுடாப் போரினால் பாதிக்கப்பட்டு நாடு திரும்பியவர்களில் சுமார் 93,000 பேர் நட்டஈடு கோரியிருப்பதாக வெளிவிவகார அமைச்சர் ஏ. ஸீ. எஸ். ஹமீத் கூறியுள்ளார். இவர்களில் சுமார் 95 சதவீதமானோர் வீடுகளில் பணிப்பெண்களாக கடமையாற்றியோராவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# போசாக்கு வாரம் சங்கானையில் கண்காட்சி

(தொல்புரம்)

வலிமேற்கு சங்கானை பிரதேச செயலகத்தினால் கடைப்பிடிக்கப்படும் போசாக்கு வாரத்தினையொட்டி மாபெரும் ''போசாக்கு வாரக் கண்காட்சி'' ஆரம்பமாகியுள்ளது.

இக் கண்காட்சி கடந்த சனிக்கிழமை காலை 9.00 மணிக்கு சுழிபுரம் விக்ரோறியாக் கல்லூரியில் வலிமேற்கு மேலதிக அரசாங்க அதிபர் திரு கா. சந்திரராசா தலைமையில் ஆரம்பித்து வைக்கப்பட்டது. இந்த நிகழ்வின்போது பிரதம விருந்தினராக கலந்து கொண்ட வட்டுக்கோட்டை அரசினர் கிராமிய வைத்தியசாலையின் வைத்திய அதிகாரி திரு. எஸ். சதாசிவம் இக் கண்காட்சியினை சம்பிரதாய பூர்வமாக திறந்து வைத்தார்.

இந்தக் கண்காட்சியின் போது பல தத்ரூபமான சுகாதாரக் காட்சிகளையும், போசாக்கு உணவின் அத்தியாவசியம் பற்றியும், சுத்தமான சத்துணவு ஆகாரங்களை உண்பதனால் திடமுள்ள, சுகதேகியாக மனிதன் வாழலாம் எனும் முறையினை காட்டும் ஓவியங்களும், உள்ளூர் உற்பத்தி பொருட்களைக் கொண்டு தயரிக்கப்பட்ட விதம்விதமான உணவு வகைகளும், இலைகளை சத்துணவாக மனிதன் எவ்வாறு பயன்படுத்தலாம் என்பது பற்றிய விளக்கங்களும், இலைகளால் தயாரிக்கப்பட்ட உணவு வகைகளும், மேலும் பலவும் காணப்பட்டன. (41)

# வன்னியில் அறக்கொட்டி தாக்கம்

தற்போது வன்னி மாவட்டத்தில் பரவலாக நெற்பயிரில் அறக்கொட்டியான் புழு தாக்கம் காணப்படுகின்றது. இந்தப்புழு இளம் பருவத்தில் பச்சை நிறமாகவும், பின்னர் மண்ணிறமாகவும் பெரிய புழுவாக இருக்கும் போது கபில நிறமாகவும் மேல் கீழ் பாகங்களில் கோடுகளும் காணப்படும்.

இப்புழு நீர் மட்டம் வரை பயிரை வெட்டும். நீர் இல்லாவிட்டால் நிலமட்டம் வரை அழிக்கப்படும். இது பயிரின் எல்லாப்பாகங்களையும் சேதமாக்கின்றது. கூடிய சேதம் ஏற்படும் போதும் பயிர் முற்றாகமாடுதின்றதுபோல்இருக்கும். சாதாரணமாக நீர்மட்டம்வரை தின்னும். நீர் இல்லாவிட்டால் அடிப்பாகம் வரை தின்னும். இப்புழுவின் தாக்கம் கூடுதலாக இரவிலேயே காணப்படும்.

நீரைக் கட்டுவதன் மூலம் இத்தாக்கத்தை குறைக்க முடியும். கூடிய சேதம் ஏற்படும்போது குளோறோ பைறியொன் 20 % செறிகுழம்பில், 28மி. லீற்றரை 13. 5 லீற்றர் நீரில் கலந்து விசிறிக் கட்டுப் படுத்தலாம்.

# ஹெரோயின் கடத்தல்

(கொழும்பு)

தூத்துக்குடி பகுதியிலிருந்து கடத்தி வரப்பட்ட மூன்றரைக் கிலோகிராம் எடையுடைய சுமார் அறுபது லட்ச ரூபாய் பெறுமதியுடைய ஹெரோயின் போதைப் பொருள் நீர்கொழும்பில் வைத்து பொலிசாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. இதுதொடர்பாக மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர். நான்காமவர் ஒருவர் கடலில் குதித்த பின்னர் என்னவானார் என்பது குறித்து எதுவும் தெரியவரவில்லை எனவும் பொலிசார் கூறியுள்ளனர்.

# நினைவு கூருகின்றோம்... 16-06-1994

1986-ம் ஆண்டு இதேதினத்தில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட மயிலிட்டியைச் சேர்ந்த 3 வயதுப் பெண் குழந்தை, மற்றும் இடைக்காடு மகாவித்தியாலய மாணவன்.

1990-ம் ஆண்டு மாங்குளத்தில் சிறிலங்கா இராணுவ முகாம் மீதான தாக்குதலின்போது வீரச்சாவெய்திய,

**ஜெறோம்** (செல்லத்துரை மாணிக்கவாசன்-பெரியகுளம் வீதி, நெடுங்கேணி-மணலாறு

**ராசகிளி** (கௌசிகன் வில்வன் - ஒட்டிசுட்டான் - முல்லைத்தீவு)

**கப்டன் வினோத்** (சின்னத்தம்பி விக்கினேஸ்வரன்-கிராஞ்சி-பூநகரி)

**லெப்.ஜமால்** (சோமசுந்தரம் தர்மராசா-ஸ்கந்தபுரம், புதுமுறிப்பு-கிளிநொச்சி)

**ரகு** (அருணாசலம் மகேந்திரன்-ஸ்கந்தபுரம் -கிளிநொச்சி)

**பசுமின்** (மாடாசாமி பாலசுப்பிரமணியம்-3-ம் வாய்க்கால்-கிளிநொச்சி)

**காசிம்** (சுப்பையா பாஸ்கரன்-பாரதிபுரம்-கிளிநொச்சி)

**சிறி** (கனகசுந்தரம் ஆனந்தராசா-இரத்தினம்பண்ணை-கிளிநொச்சி)

**ஜமுனன்** (கந்தசாமி இரத்தினகுமார்- உருத்திரபுரம்-கிளிநொச்சி)

**செந்தூரன்** (பாலசுந்தரம் முத்துவாசன்-இல:11, உருத்திரபுரம்-கிளிநொச்சி)

**குணா** (நடராசா இராசவேந்திரன்-6-ம் பி.ரி, இராமநாதபுரம்-கிளிநொச்சி)

**சுஜாத்** (நடராசா குமரகுருநாதன்-புலோலி, பருத்தித்துறை-யாழ்)

**விமலன்** (காத்தான் ஐங்கரன் - செல்வானந்தராஜா-சிறுப்பிட்டி தெற்கு-நீர்வேலி)

**மஜீத்** (இராசு ரமேஸ்-கெனடி வீதி, நாவாந்துறை-யாழ்)

**ஜான்-அனஸ்ரின்** [துரைலிங்கம் ஐம்புலிங்கம்-அந்தோனியார்வீதி, பருத்தித்துறை-யாழ்]

யாழ்-காங்கேசன்துறை காபர்வியூ விடுதியில் அமைந்துள்ள சிறிலங்கா இராணுவ முகாம்மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் முயற்சியின்போது வீரச்சாவெய்திய,

**மேஜர் விவேகன்** (வல்லிபுரம் ரமேசன்-நெணியம்பை, வல்வெட்டித்துறை-யாழ்)

**கப்டன் அன்சார்** (கனகரத்தினம் சுரேந்திரன்-விபாங்கொடை, தெல்லிப்பழை கிழக்கு-யாழ்)

**2-ம் லெப்.ஸ்ராலின்** (பாலசுந்தரம் உதயகுமார்-கப்பலுடையவர்வளவு, வல்வெட்டித்துறை)

**கரன்** (மயில்வாகனம் உதயகுமார்-வேந்தனை, மாவிட்டபுரம்-யாழ்)

**தவா** (பாவேல் ஜெயராஜ்-4-ம் குறுக்குத்தெரு, கொழும்புத்துறை-யாழ்)

யாழ்-பலாலியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**வெற்றி** (இரத்தினம் அருள்மோகன்-மாவைக்கலட்டி, தெல்லிப்பழை-யாழ்

யாழ்-கோட்டையில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**ஜெயராஜ்** (மகேந்திரம் ஜெபந்திரராஜா-மயிலியதனை, வல்வெட்டித்துறை-யாழ்)

மட்டு-களுவாஞ்சிக்குடிப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரின் முகாம்மீது மேற்கொள்ளப்பட்ட சமரின்போது வீரச்சாவெய்திய

**இராமன்** (மாப்பிள்ளை லெப்பை அஸ்வின்-இறக்காமம்-அம்பாறை)

**லெப்.லக்கி** (- - - அட்டைப்பள்ளம் - அம்பாறை)

**கப்டன் ஆனந்த்** (தங்கையா சுரேஸ்குமார்-இருதயபுரம் மேற்கு-மட்டு)

**லெப். கஜன்** (...ஏறாவூர் - மட்டு)

**ஜுனைற்** (பூபாலப்பிள்ளை புவிராஜ்-களுவாஞ்சிக்குடி - மட்டு)

**முரளி** (கிருஷ்ணபிள்ளை முரளி-ஆரையம்பதி-மட்டு

**டிக்கினஸ்** (கிருஷ்ணபிள்ளை தேவானந்தம்- திருப்பழுகாமம் - மட்டு)

**பசிலன்** (பக்தர் புஷ்பநாதன் - வெல்லாவெளி மட்டு

**உலகநாதன்** (கனகசபை சுந்தரலிங்கம் - கொக்கட்டிச்சோலை - மட்டு)

**மௌனரா** (-லிங்கநாதன் - கொக்கட்டிச்சோலை - மட்டு)

**மொறிஸ்** (சாமித்தம்பி இராசதுரை - கோயில்போரதீவு - மட்டு)

**மெடிசன்** (தி. கேதீஸ்வரன் - பெரியபோரதீவு - மட்டு)

**சரவணன்** (- - ஆரையம்பதி - மட்டு)

**ரங்கன்** ( பதுளை)

**எல்லாளன்** ( - - நுவரெலியா - மலையகம்)

அம்பாறை - அறுகம்பை முகாமில் வைத்து சிறிலங்கா ராணுவத்தினரால் ரயர்போட்டு எரித்துக் கொல்லப்பட்ட குஞ்சனோடைப் பாலத்தடியைச் சேர்ந்த 4 தமிழர்கள், மற்றும் சிறிலங்கா ராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்ட மத்திய முகாம் 4-ம் குடியிருப்பைச் சேர்ந்த 2 தமிழிளைஞன்.

யாழ். கோட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினர் மேற்கொண்ட தாக்குதலில் கொல்லப்பட்ட 3 தமிழர்கள்.

1991ஆம் ஆண்டு வவுனியா - செட்டிகுளம் முகாமிலிருந்து மடுநோக்கி வந்த சிறிலங்கா இராணுவத்தினருடன் ஏற்பட்ட சமரின்போது வீரச்சாவெய்திய,

**அசோகன்** (சதாசிவம் பரமகுரு - முனைத்தீவு - மட்டு)

ஆனையிறவில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**விக்கி** (தியாகராசா உதயராசா - ஸ்கந்தபுரம்-கிளிநொச்சி)

வவுனியா - பிராமணாங்குளம்பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சாவெய்திய,

**ஜிம்கெலி** (பாலசிங்கம் ஜெயராசலிங்கம் - ஏறாவூர் - மட்டு)


ஓரகவை தாண்டும் ஒய்யாரக் குழந்தை

விதுரா

விதம் விதமான ஆடைகளை விரும்பியவகையில் தெரிவுசெய்ய

விதம் விதமான ஆடைகளை விரும்பியவகையில் தெரிவுசெய்ய

V

# விதுரா ஆடையகம்

## 34, நவீன சந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம்

ஓரகவை தாண்டும் ஒய்யாரக் குழந்தையவள் இன்று
பேரெடுத்து நிலைத்திடுவாள் இப்புவியில் என்றும்
யாரிவள் என்றறிய வாருங்கள் விதுராவிடம்
தத்தித்தத்தி நடை பயிலும் இவளுக்கு இன்றுவரை
ஒத்துழைப்புத் தந்து ஓங்கச் செய்தவர்களுக்கும்
வித்திட்டு விளைவித்துவிட்ட அன்பர்கள் நண்பர்கள் ஆதரவாளர்கள் அனைவருக்கும்
பேருவகையுடன் தரும் பெருவணக்கங்கள்.

நன்றி

## விதுரா ஆடையகம்

(உரிமையாளர்களும், ஊழியர்களும்)

34, நவீன சந்தை (உட்புறம்), யாழ்ப்பாணம்

(8575)

இராணுவத்தினருடனான சமரின்போது வீரச்சா வெய்திய,

**ஜிம்கெலி** (பாலசிங்கம் ஜெயராசலிங்கம் - ஏறாவூர் - மட்டு)

**கப்டன் வீரன்** (கணபதிப்பிள்ளை குமார் - அரிப்புத்துறை, முருங்கன் - மன்னார்)

**லெப். நகுலேஸ்** (காளிமுத்து கந்தசாமி - புளியங்குளம், அடம்பன் - மன்னார்)

**ஜெயதாஸ்** (தோ. ஜெயதாஸ் - சோசை, வங்காலை - மன்னார்)

**கீதன்** (சந்தியா சூசைதாஸ் பிரபாகரன் - பனங்கட்டிக்கொட்டு - மன்னார்)

**மடுத்தின்** (ஆறுமுகம் சித்திரவேல் - மாளிகைத்திடல் - மன்னார்)

**வல்லவன்** (கதிர்காமத்தம்பி ரவி - பனங்கட்டிக்கொட்டு - மன்னார்)

**லெப். கபில்** (மகேஸ்வரலிங்கம் சசிகரன்-ஏழாலை மேற்கு, சுன்னாகம் - யாழ்ப்பாணம்)

**லெப். செல்வம்** (தர்மதாஸ் விமலதாஸ் - வெளிச்சவீடு ஒழுங்கை - பருத்தித்துறை - யாழ்)

**லெப். ஜெராட்** (சரவணமுத்து சிறிஸ்கந்தராஜா உசன், கொடிகாமம் - மிருசுவில்)

**2-ம்லெப். ரவி** (நடராசா கணேசன் - ஆலயவீதி, காங்கேசன்துறை - யாழ்)

**2-ம் லெப். நிசாந்தன்** (மாணிக்கராசா ஜெயராசா - சங்கத்தானை. சாவகச்சேரி-யாழ்)

**விக்கினேஸ்** (துரைசிங்கம் மனோகரன் - சிந்திப்பந்தல், இளவாலை-யாழ்)

**முரளி** (பா. வசந்தகுமார் - சுன்னாகம் யாழ்)

**யூறி** (ராஜசேகரன் டியூக் - மத்திய மேற்குவீதி.குருநகர்-யாழ்)

இதே சமரின்போது விழுப்புண்ணடைந்த போராளிகளை தூக்கிவரும் பணியின்போது கொல்லப்பட்ட நாட்டுப்பற்றாளரான,

**ஜெயதாஸ்** (- - - - - - -)

வவுனியா-மன்னார் வீதி, 3-ம் கட்டைப் பகுதியில் சிறிலங்கா இராணுவத்தினரால் சுட்டுக்கொல்லப்பட்ட தமிழ் வயோதிபர்,

ஆகியோரை இந்நாளில்
நினைவு கூருகின்றோம்.

**தமிழீழ விடுதலைப்புலிகள்.**

(சி-9805)

# அம்பன் வைத்தியசாலை மருந்துக்கு தட்டுப்பாடு

வடமராட்சி கிழக்கில் உள்ள அம்பன் அரசினர் வைத்தியசாலையில் நிலவும் மருந்து வகைகள் தட்டுப்பாட்டால் வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளிகள் பலத்த இன்னல்களையும் பாதிப்புக்களையும் அனுபவித்து வருவதாகப் பலத்த புகார் செய்யப்பட்டுள்ளது.

இவ்வைத்தியசாலையில் நிலவும் மருந்துவகைகள் தட்டுப்பாட்டை நீக்க நடவடிக்கைஎடுக்குமாறு இவ்வைத்தியசாலையில் சிகிச்சை பெறும் நோயாளிகள் யாழ். சுகாதார சேவைகள் பணிப்பாளரை அவசரமாகக் கேட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

வைத்திய வசதிகள் இல்லாத வடமராட்சி கிழக்குப் பகுதியில் உள்ள இவ் அம்பன் வைத்தியசாலையில் மருந்து வகைகளுக்குத் தட்டுப்பாடேற்பட்டுளது பெரும் பாதிப்புக்களை ஏற்படுத்தியுள்ளதாகவும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. (25)

---

ஊர்காவற்றுறை ப. நோ. கூ. சங்கம்

## பதவி வெற்றிடம்

**பதவி : கணக்காளர்- 104/08**

சம்பளத்திட்டம் : 1005 - 1705 / 40 × 5 - 50×10

(அனுமதிக்கப்பட்ட படிகளும் வழங்கப்படும்)

வயதெல்லை: 23 - 45 வருடங்கள்

**கல்வி மற்றும் தகைமைகள்:**

அ. கூட்டுறவுப் பணியாளரின் 9வது சம்பளத்திட்டத்தின் கணக்குப்பதிவாளர் /கணக்கியல் அல்லது கணக்காய்வு எழுதுநர் பதவியில் 03 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது கூட்டுறவுப் பணியாளரின் 10வது சம்பளத்திட்டத்தின் கணக்குப்பதிவாளர்/ கணக்கியல் அல்லது கணக்காய்வு எழுதுநர் பதவியில் 06 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்

அல்லது

ஆ. ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இடைநிலைப் பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக / கைத்தொழில் ஸ்தாபனம் ஒன்றில்கணக்கியல் அல்லதுகணக்காய்வுத்துறையிலான மேற்பார்வை மட்டத்தில் 02 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் அல்லது ஐக்கிய இராச்சியத்தின் கணக்குப் பதிவாளர் நிறுவனத்தின் இடைநிலை பரீட்சையுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக/ கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் கணக்காய்வுத் துறையிலான மேற்பார்வைமட்ட பதவியில் 04 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்.

அல்லது

இ. கூட்டுறவுப் பணியாளர் தராதரப்பத்திரம் (உயர் தரம்)/ க.பொ. த உயர்தரத்தில் கணக்கியல் உட்பட மூன்று பாடங்களில் சித்தியுடன் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக கைத்தொழில் ஸ்தாபனமொன்றில் கணக்கியல்/எண்பார்வை மேற்பார்வை மட்டத்துறையில் 4 வருடங்களுக்குக் குறையாத அனுபவம்

விண்ணப்பங்கள் யாவும் ''பொதுமுகாமையாளர் ஊர்காவற்றுறை ப.நோ.கூ. சங்கம், பி. எஸ். சேவிஸ் நிலையம், ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்'' என்ற முகவரிக்கு 24-6-94ந் திகதிக்கு முன்னர் அனுப்பி வைக்கவும்.

பொதுமுகாமையாளர்.
ஊர்காவற்றுறை ப.நோ.கூ.ச
யாழ்ப்பாணம்.

(சி-9677)

---

## யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பதவி வெற்றிடம்

பொருத்தமான அபேட்சகர்களிடமிருந்து பொதுச் சுகாதார தாதி பதவிக்கான விண்ணப்பங்கள் 1994 ஜூலை 8 ஆம் திகதி வரை என்னால் பெற்றுக் கொள்ளப்படும்.

சம்பள அளவுத்திட்டம்; ரூபா 3265 - 19 X65 - 4500/- மாதமொன்றுக்கு.

தகைமைகள்:- (அ) இலங்கை மருத்துவ மன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தகுதிச் சான்றிதழுடன் தாதியாக 12 ஆண்டு அனுபவத்தை பெற்றிருப்பதுடன் அதில் 8 ஆண்டு அனுபவத்தை மாணவர் சுகாதாரச் சேவையில் அல்லது பொதுச் சுகாதார சேவையில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமொன்றில் பெற்றிருத்தல் வேண்டும்.

அல்லது

(ஆ) இலங்கை மருத்துவ மன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்ட தகுதிச் சான்றிதழுடன் தாதியாக 10 ஆண்டு அனுபவத்துடன் நலம் பேணலின் எந்த அம்சங்களிலாவது முதனிலைக்குப் பிந்திய தகைமைகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

வயது:- 40 ஆண்டுகளுக்கு மேற்படலாகாது.

தெரிவு :- உளச்சார்பறித் தேர்வு, நேர்முகத் தேர்வு ஆகியனவற்றின் மூலம்.

மேற்குறித்த சம்பளத்துடன் 1994 டிசெம்பர் 31 ஆம் திகதி வரை சம்பளத்தின் 25 சதவீதத்திற்குச் சமமான தொகை செலுத்தப்படும்.

9/93 இலக்க 1993 மே 12 ஆம் திகதிய பொது நிருவாகச் சுற்றறிக்கையின் ஏற்பாடுகளிற்கு ஏற்ப மாதாந்தப்படியாக 600/- ரூபா செலுத்தப்படும்.

மாதாந்தப் பல்கலைக்கழகப் படியாக 500/- ரூபா செலுத்தப்படும்.

மாதாந்த வாழ்க்கைச் செலவுப் படியாக 250/- ரூபா செலுத்தப்படும்.

ஒவ்வொரு விண்ணப்பப் படிவத்திற்கும் 20/- ரூபாவை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மக்கள் வங்கியில் அல்லது இப்பல்கலைக்

---

# விடுமுறையை நீடிக்க பாஸ்கரலிங்கம் கோரிக்கை

(கொழும்பு)

வைத்திய சிகிச்சைக்காக வெளிநாடு சென்றுள்ள நிதி திட்டமிடல் அமைச்சின் செயலாளர் ஆர். பாஸ்கரலிங்கம் மேலும் இரண்டு மாதங்கள் விடுமுறைக்கு விண்ணப்பித்துள்ளார்.

இவர் முன்னர் இரண்டுமாதங்கள் விடுமுறைக்கு விண்ணப்பித்தே சிகிச்சைக்காக வெளிநாடு சென்றிருந்தார்.

# பாதுகாப்பு வரியில் அதிகரிப்பு இராது

**— அமைச்சர் ஹரோல்ட்**

(கொழும்பு)

பாதுகாப்பு வரியை அதிகரிக்கும் நோக்கம் இல்லை என நீதி இராசாங்க அமைச்சர் ஹரோல்ட் ஹேரத் கூறியுள்ளார்.

''பாதுகாப்புவரி மூன்றரைவீதத்திலிருந்துஏழுசதவீதமாக அதிகரிக்கப்படும் எனவும் பண நோட்டுகள் அச்சடிக்கப்படும் எனவும் வெளியாகிய செய்திகளில் உண்மையில்லை''

''பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கு தேவையான நிதி குறைநிரப்புப் பிரேரணை மூலம் பெறப்படும்'' என மேலும் அவர் தெரிவித்தார்.

# பரிசளிப்பு விழாவில் கலந்து கொள்ளவிடாது சந்திரிகாவை தடுக்க அதிகாரிகள் முயற்சி

(கொழும்பு)

சிறிமாவோ பண்டாரநாயக்கா வித்தியாலய பரிசளிப்பு விழாவில் தென்மாகாண முதலமைச்சர் சந்திரிகா குமாரணதுங்கா கலந்து கொள்ளக் கூடாது என ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவின் பாதுகாப்பு அதிகாரிகள் வற்புறுத்தி வருவதாக தெரிவிக்கப்படுகிறது.

இப்பாடசாலை பரிசளிப்பு விழாவில் பிரதம விருந்தினராக சந்திரிகா குமாரணதுங்காவும் சிறப்பு விருந்தினராக ஜனாதிபதி டி. பி. விஜேதுங்காவும் கலந்து கொள்ள ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

இவ்வேளையில் இப்பாடசாலைக்கு வந்த ஜனாதிபதியின் பாதுகாப்புக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ்மா அதிபர் பாலசூரிய, ஜனாதிபதி பாடசாலையில் தங்கியிருக்கும் நேரத்தைக் குறைக்க வேண்டும் என்பதால் சந்திரிகாவிற்கு இவ்விழாவில் உரையாற்ற சந்தர்ப்பம் வழங்கக் கூடாது என கேட்டுக்கொண்டார்.

ஆனால் இவரின் வேண்டுகோளை ஏற்கமறுத்த பாடசாலை அதிபர் இது சந்திரிகா குடும்பத்தின் பாடசாலை எனவும் இது மேல்மாகாணத்தில் அமைந்திருப்பதால் சந்திரிகாவின் வருகை தவிர்க்க முடியாதது எனவும் தெரிவித்திருந்தார்.

எனினும் இப்பரிசளிப்பு விழா அழைப்பிதழில் அதிபருக்குத் தெரியாமலேயே சந்திரிகாவின் பெயர் சிவப்பு மையினால் அழிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

## மாமரச் செய்கை

கிளிநொச்சி மாவட்ட இராமநாகபுரத்தில் பழச் செய்கைத்திட்டத்தின் கீழ் 4 ஏக்கர் காணியில் சுமார் 170 நல்ல இன மாங்கன்றுகள் நடப்பட்டு, சீரான முறையில் பராமரிக்கப்பட்டு வருகின்றது.

இப்பகுதி வாழ் மக்களின் மாம்பழத்தேவையைப்பூர்த்தி செய்யும் நடவடிக்கையாக, இத்திட்டத்தை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தின் கிளிநொச்சிக் கோட்ட விவசாயப்பகுதி செயற்படுத்தி வருகிறது.

## சுகாதார கருத்தரங்குகள்

(பருத்தித்துறை)

போசாக்கு வாரத்தையொட்டி புலோலி மெதடிஸ்த மிசன் பாடசாலை மண்டபத்தில் பருத்தித்துறை மாவட்ட

## கோமாரியில் சீருடை

கொழும்பில்தரித்து நிற்கும் றுகுனுகப்பல் இன்று பருத்தித்துறை நோக்கி புறப்படும் என அரச அதிபர் அறிவித்துள்ளார் இதில் 900 மெற்

---

## 6-ம் நாள் கண்ணீர்ப்பூக்கள்



அமரர்

## அ. துரைராசா அவர்கள்

ஊற்று நிறுவனத்திற்கு
உற்ற துணையாய் நின்று
ஆற்றிய சேவையை போற்றுவார்
மக்கள் மறவார் ஒருபோதும்.

ஊற்று நிறுவன கொடிகாம கொத்தணி கழகங்கள் சார்பில், தொண்டர்கள்.

(சி-9810) நவம், சோதி, பொன், ஈசன்,

---

## 4-ம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு:
19 - 03 - 1973

வீரச்சாவு:
16 - 06 - 1990

**வீரவேங்கை ஐம்புலிங்கம் (ஜான்)**

யாழ்ப்பாணம்.
(சி-9677)


# நீர்ப்பாசன தொழில்நுட்பவியலாளர்கள் உடன் தேவை

தாயக பொருண்மியத்தை வளர்க்கும் நோக்குடன் நாம் துரித நீர்வள மேம்பாட்டுத் திட்டத்தை அமுலாக்க உள்ளோம். இதை இனிது நிறைவேற்ற எமக்கு பின்வரும் அனுபவசாலிகள் உடன் வேண்டும்.

★ நீர்ப்பாசன பொறியியலாளர்கள்
★ நீர்ப்பாசன தொழில் நுட்பஉத்தியோகத்தர்கள்
★ நீர்ப்பாசன தொழில் மேற்பார்வையாளர்கள்
★ நீர்ப்பாசன படவரைஞர்கள்

தகைமையுடையவர்களுக்குத் தகுந்த சம்பளம் வழங்கப்படும். பெருநிலப்பரப்பில் வேலை செய்ய தெரிவு செய்யப்படுபவர்களுக்கு மேலதிக ஊக்குவிப்பு பணமும் கொடுக்கப்படும்.

**உங்கள் அனுபவம் பற்றிய சான்றிதழ்களுடன் இன்று**

**வியாழன் 16-6-94 அல்லது வெள்ளி 17-6-94 காலை 10 மணிக்கு**

கீழ் உள்ள விலாசத்தில் எம்முடன் தொடர்புகொள்ளவும்.

**உட்கட்டுமானப் பகுதி,**
**தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனம்**

**இல. 10, செம்பியன் வீதி,**
**கொக்குவில்.**

(சி-9649)


...லைக்கழக மக்கள் வங்கியில் அல்லது இப்பல்கலைக் கழகச் சிறாப்பரின் முகப்பு மேசையில் செலுத்தி இப்பல்கலைக் கழக சிரேஷ்ட உதவிப் பதிவாளர் (தாபனக்கிளை) அலுவலகத்தில் பெறக் கூடிய படிவங்களில் விண்ணப்பித்தல் வேண்டும்.

தபால் மூலம் விண்ணப்பப்படிவங்களையும் இதர விபரங்களையும் பெற விரும்புவோர் யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் நிதியாளர் பெயரில் பெறப்பட்ட 20/- ரூபா காசுக்கட்டளை / தபாற் கட்டளையுடன் 23 X10 ச. மீ. அளவுடைய சுயமுகவரியிட்டு 1/- ரூபா முத்திரை ஒட்டப்பட்ட கடித உறையை அனுப்புதல் வேண்டும். விதிக்கப் பெற்ற படிவங்களில் அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மாத்திரம் ஏற்றுக் கொள்ளப்படும். அரசாங்கத்திணைக் களங்கள், அரச கூட்டுத் தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளில் உள்ள விண்ணப்பதாரிகள் தமது நிறுவனத் தலைவர் மூலம் விண்ணப்பித்தல் வேண்டும். அரசாங்க சேவையிலிருந்து ஓய்வு பெற்றவர்களும் ஒப்பந்த அடிப்படையிலான நியமனத்துக்கு விண்ணப்பிக்கலாம். அவ்வாறான விண்ணப்பதாரிகளின் வயதெல்லை 70 ஆகும். இளைப்பாறிய ஒருவர் இப்பதவிக்கு நியமிக்கப்பட்டால் இளைப்பாறிய போது கடைசியாகப் பெற்ற சம்பளம் செலுத்தப்படும். விண்ணப்ப முடிவு திகதியின் பின்னர் கிடைக்கும் விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படும்.

**பதிவாளர்**
யாழ். பல்கலைக்கழகம்,
யாழ்ப்பாணம்.
1994.06.08
(சி-9671)

...மசன் பாடசாலை மண்டபத்தில் பருத்தித்துறை மாவட்ட வைத்திய அதிகாரி டாக்டர் சி. கதிரவேற்பிள்ளை தலைமையில் போசாக்கும் பொதுச் சுகாதாரமும், கருத்தரங்கும் இலைக்கஞ்சி அறிமுக விழாவும் நடைபெற்றது. இவ்விழாவிலே பருத்தித்துறை பிரதேச செயலர் திரு. ஆ. சிவசுவாமி முதன்மை விருந்தினராகக் கலந்துகொண்டார். சுகாதாரப் பிரச்சினைகள் பற்றி யாழ். மாவட்ட மேற்பார்வை சுகாதாரப் பரிசோதகர் திரு. செ. செல்வரத்தினமும். ''வாய்ச் சுகாகாரம்'' பற்றி பல் வைத்திய நிபுணர் திருமதி கு. பத்மராணியும், ''தாய் சேய் நலன்'' பற்றி குடும்பநல உத்தியோகத்தர் சி. பத்மாவதியும. ''சத்துணவு'' பற்றி சுகாதார ஆலோசகர் திரு. ந. செல்லையாவும் கருத்துரைகளை நிகழ்த்தினர். போசாக்கும் சுகாதாரமும் பற்றிய பேச்சுக்கள், பாட்டுக்கள், வில்லுப்பாட்டு, நாடகம் என்பனவும் இடம் பெற்றன (25)

என அரச அதிபர் அறிவித்துள்ளார் இதில் 900 மெற்றிக் தொன் சீனி ஏற்றி வரப்படுகிறது.

இதேவேளை கோமாரி கப்பல் 2000 மெற்றிக்தொன் அரிசி, பால்மா, பாடசாலை மாணவர்களுக்கான சீருடை ஆகியவற்றை ஏற்றிக் கொண்டு விரைவில் கொழும்பிலிருந்து புறப்படவுள்ளது.

## வெண்கட்டிகள் வந்தன

யாழ். மாவட்ட பாடசாலைகளுக்கென ஒருதொகுதி வெண்கட்டிகள் கொழும்பில் இருந்து கப்பல் மூலம் யாழ் கல்வித்திணைக்களம் வந்து சேர்ந்துள்ளன.

இவற்றில் சுமார் 40 பெட்டி வெண்கட்டிகள் யாழ் வலயம்-1 கல்வித்திணைக்களத்திற்கு வழங்கப்பட்டுள்ளது.

இது போன்ற மற்றொரு தொகுதி வெண்கட்டிகள் யாழ் வலயம்-2 கல்வித்திணைக் களத்திற்கு அனுப்பிவைக்கப் பட்டுள்ளதாக தெரிய வருகின்றது (பா)

# நினைவழியா நாள் ஆண்டு - 4

# வீரவேங்கை தினேஷ்

## (யோகநாதன் பிரபாகரன்)

தமிழ் மண்ணில்: **27-12-1972**
மாங்குளம் முகாமுக்குள்: **16-06-1990**

மாங்குளம் முகாம் தகர்க்க
உயிருடன் உடலையும் அர்ப்பணித்தாய்,
மகனே! வீரனே! நண்பனே!
இன்று அந்த முகாம் மண்மேடு — மேட்டில் புலிக்கொடி
விடிவிற்கு தூரம் அதிகமில்லை.

நினைவழியா நாளில் கண்ணீர்ப் பூச்சொரியும்
அம்மா, அப்பா,
அக்கா, தங்கை, தம்பி,
அம்மம்மா - வேரவில் அப்பப்பா,
உறவினர் - நண்பர்கள் (8574)

உயிலங்குளம்,
துணுக்காய்.

# வீரவேங்கை ஐம்புலிங்கம் (ஜான்)

## (துரைலிங்கம் அனஸ்ரீன்)

மாங்குளம் தன்னிலே பகைவரை அழித்திட
வேங்கையாய் பாய்ந்து நீ மாவீரனாய் ஆகி
நான்கு ஆண்டுகள் ஓடி மறைந்தாலும் - ஐயா
உருண்டு ஓடுகின்றதே உன் நினைவும் செயலும்.

உன்நினைவால் வாடும்:
பெற்றோர், சகோதரர்கள்,
உறவினர்கள்.

அந்தோனியார் வீதி,
பருத்தித்துறை.

(சி-9807)

# 31 ம் நாள் நினைவஞ்சலி



தாயின் மடியில்
04.04.1975

தாயக மண்ணில்
18.05.1994

## லெப். துரையப்பன் வேதா

### (கோணமலை சசிகுமார்)

மட்டக்களப்பு

இளந்தளிர் இவனை மறப்போமா? இனி
என்றும் இவன் பெயர் துறப்போமா?
களப்புலி மறவீரம் வரலாறு - புதுக்
காவியம் இவன் புகழ் மறக்காது.

17.6.94 நாளை எமதில்லத்தில் நடைபெறவுள்ள கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு சகபோராளிகளையும் உற்றார். உறவினர்களையும் அழைக்கின்றோம்.

**வேதா குடும்பத்தினர்**

அரசடி, தொண்டைமானாறு.
(சி-9647)

கடற்படை, விமானப்படைகளில்

# ஓய்வு பெற்றவர் நியமனம்; நிதிச்சலுகை ஏதுமில்லை

(கொழும்பு)
ஓய்வு பெற்ற பின் மீண்டும் வடக்கு கிழக்கில் பணிக்கமர்த்தப்பட்டு கடற்படை, விமானபபடையில் சேவையாற்றுவோருக்குதிரும்பவும் அவர்கள் கடமைக்கு அமர்த்தப்பட்ட காலத்தையும் சேர்த்தே ஒய்வூதியமும் பணிக்கொடைகளும் வழங்குவது என பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

கடற்படையிலும் விமானப்படையிலும் வட-கிழக்கில் பணிபுரிய புதிதாக சேர்க்கப்பட்டவர்கள் மூலம் தொழில் நுட்ப மற்றும் வேறு தரங்களுக்கான தேவைகளை முழுமையாக நிறைவேற்றுவது சாத்தியமில்லை என்பதால் ஓய்வு பெற்றவர்கள் மீண்டும் பணிக்கமர்த்தப்படுவதாக தெரிவிக்கப்படுகிறது.

இவர்களுக்கு ஊதியத்தை தவிர விசேட நிதிச்சலுகைகள் எவற்றையும் வழங்குவதில்லை எனவும் திரும்பவும் சேவையில் சேர்ந்தோருக்கு தற்போது சேவையாற்றும் காலத்தையும் சேர்த்தே ஒய்வூதியம் வழங்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது.

## மின்சாரசபை ஊழியர் சட்டப்படி வேலை

(கொழும்பு)
இலங்கை மின்சார சபையைச் சேர்ந்த ஊழியர்கள் நேற்றுமுன்தினம்முதல்சட்டப்படிவேலைப்போராட்டத்தை ஆரம்பித்துள்ளதாக தெரிவித்துள்ளனர்.

இலங்கை மின்சார சபைத் தொழிலாளர் சம்மேளனத்தைச் சேர்ந்த பதினையாயிரம் ஊழியர்கள் இவ்வாறு சட்டப்படிவேலைப் போராட்டத்தில் இறங்கியுள்ளதாகவும் ஐந்து அம்சக் கோரிக்கையை முன் வைத்து இவர்கள் மேற்படி போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

இதனைத் தொடர்ந்து எந்த நேரமும் மின்சாரத் தடை ஏற்படும் என்றும் எனவே பல தொழிற்சாலைகளின் உற்பத்தி பெரிதும் பாதிக்கப்படும் எனவும் கூறப்படுகின்றது.

இதே வேளை இலங்கை மத்திய வங்கியின் ஊழியர் சங்கங்கள் நேற்று முன்தினம் முதல் சட்டப்படி வேலை செய்யும் போராட்டத்தை நடாத்துவது என தெரிவித்திருந்தனர்.

பத்து வருடங்களாக மத்திய வங்கிக்கு ஊழியர்கள் நியமனம் செய்யப்படவில்லை எனவும் இதனால் அங்கு வேலை செய்யும் ஊழியர்கள் வேலைப் பளுவினால் துன்பமடைவதாகவும் அவர்கள் தெரிவிததனர்.

மத்தியவங்கி ஊழியர்களின் இப்போராட்டத்தினால் நாடு முழுவதும் பணம் வழங்குதல் பெரும் பாதிப்படையும் என தெரிவிக்கப்படுகின்றது.

## மாவட்ட ரீதியிலான தமிழ் மொழி போட்டிகள்

(யாழ்ப்பாணம்)
இவ்வருடத்திற்கான தமிழ் மொழிக் கலைத்திறன் போட்டிகள் மாவட்ட நிலையில் நாளை 17ஆம் திகதி காலை 8.30 மணி முதல் மருதனார் மடம் இராமநாதன் கல்லூரியில் ஆரம்பமாகவுள்ளது.

அன்றைய தினம் இயல், இசை, சார்ந்த 2ம், 3ம் 4ம், 5ம் பிரிவினர்களுக்கான நிகழ்ச்சிகள் இடம் பெறவுள்ளன.

இரண்டாம் பிரிவு வாசிப்பு தவிர்ந்த ஏனைய போட்டிகளில் கோட்டமட்டத்தில் முதலிடம் பெற்ற போட்டியாளர்களே இப்போட்டிகளில் பங்கு கொள்கின்றனர்.

எதிர்வரும் 18 ஆம் திகதி சனிக்கிழமை காலை நடனப் போட்டிகள் யாழ் இந்து மகளிர் கல்லூரியிலும் நாடகப் போட்டிகள் யாழ் இந்துக் கல்லூரியிலும் நடைபெறவுள்ளன.

வலய மட்டத்தில் நடைபெற்ற போட்டிகளில் முதல் மூன்று இடங்களைப் பெற்ற நிகழ்ச்சிகள்மாவட்ட நிலையில் பங்கு கொள்ளதகுதி பெற்றுள்ளன. போட்டிகள் நடைபெறும் இடங்களில் அன்றைய தினமே சான்றிதழ் வழங்கப்படும்.

மேலும் கோட்டநிலையில் முதலிடம் பெற்ற நடன நிகழ்ச்சிகளே மாவட்ட நிலையில் போட்டிக்கு அழைக்கப்படுகின்றன. (பா)

## தடுப்பூசி மருந்து வந்தன

(தென்மராட்சி)
சாவகச்சேரி மருத்துவமனையில் கடந்த இரண்டு மாதங்களாக தட்டுப்பாடாக இருந்த தடுப்பூசி மருந்துகள் இவ்வாரம் வந்து சேர்ந்தன கடந்த பலமாதங்களாக நோயாளிகள் இவ் ஊசி தட்டுப்பாட்டினால் பல இன்னல்களை எதிர்நோக்கி இருந்தமை குறிப்பிடத்தக்கது. (86)


கலாலயாவின்
மனைப்பொருளியலும்
கைத்திறனும்

பொருட்காட்சி

★ உள்ளூர் உணவுகள்
★ நைந்த ஆடைகள்
★ கைப்பணிகள்
★ செயற்கை மலர்கள்
★ கேக் அலங்காரம்

காலம்: ஜூன் 18-ம், 19-ம், 20-ம் திகதிகளில்
நேரம்: காலை 10 --- மாலை 6 வரை
இடம்: விக்டோரியா வீதி, யாழ்ப்பாணம்.

அனைவரையும்
அன்புடன் அழைக்கின்றோம்.

(சி 9661)


## மேடை நாடகம்

(தொல்புரம்)
சண்டிலிப்பாய் பிரதேச செயலகத்தினால் நடாத்தப்படும் சுகாதார வார விழா நிகழ்வின் நிறைவு நாளான 18ஆம் திகதி அன்று மானிப்பாய் இந்துக் கல்லூரி மண்டபத்தில் மேற்படி பிரதேச செயலக பணியாளர்கள், அலுவலர்கள் வழங்கும் ''அவன் தாறான்'' என்னும் நாடகம்மேடையேறவுள்ளது. (41)

## முத்திரையிடல்

(தொல்புரம்)
வலிமேற்கு பிரதேசசபை வட்டுக்கோட்டை உப அலுவலகப்பிரதேச வர்த்தகர்களுக்குரிய நிறுக்கும் கருவிகளான தராசு படிகளுக்கு 1994 ஆம் ஆண்டிற்கான முத்திரையிடப்படவுள்ளன.

மேற்படி நிறுவைகள் அளவைகள் உபகரணங்களுக்கு முத்திரையிடல் எதிர்வரும் 20, 21, 23, 24 ஆம் திகதிகளில் காலை 8.30 மணிமுதல் பிற்பகல் 2.00 மணி வரை வட்டுக்கோட்டை உப அலுவலகத்தில் இடம் பெறவுள்ளதென வலிமேற்கு பிரதேச சபை செயலாளர் திரு. க. திரவியம் தெரிவித்துள்ளார். (41)

## அதிபர்களுக்கான கூட்டம்


பேராசிரியர் அ.துரைராசா
அவர்களிற்கு
எமது இதய அஞ்சலி



மலர்வு
10- 11- 1934

உதிர்வு
11- 06- 1994

ஐயா,
ஆண்டு தோறும் பொங்கல் விழக்காண வருவது போல் 12-06-94லும் கும்பாபிஷேக விழாக்காண வருவீர்கள் என இருந்தோம். ஆனால் வந்ததோ! எம்மையெல்லாம் ஆற்றொணாத் துயரில் ஆழ்த்தி மீளாத்துயில் கொண்ட செய்தி.



## தமிழீழ நிர்வாக சேவை
தமிழீழம்
# வேலை வாய்ப்புக்கள்

கீழ்க்காணும் பதவிக்குரிய வெற்றிடங்களை நிரப்புவதற்கு எம்மால் விளம்பரப்படுத்தப்பட்ட திகதியில் இருந்து 1994-06-25ஆம் நாள் வரை பி. ப. 5 00 மணிவரை அந்தப் பதவிக்குரிய தகைமைகளையுடைய பொருத்தமான அபேட்சகர்கள் விண்ணப்பங்களுடனும், சுய விபரங்களுடனும், கல்விச் சான்றிதழ்களுடனும், குணநலச் சான்றிதழ்களுடனும் நேர்காணலுக்காகத் தொடர்பு கொள்ளவும்.

பொதுவான தகைமைகள்:-
01. தமிழீழப் பிரஜையாக இருக்க வேண்டும்.
02. பொருத்தமான கல்வித் தகைமையுடையவராகவும், தேகாரோக்கியமுடையவராகவும் இருக்க வேண்டும்.
03. இலங்கை அரச சேவையில் இருந்தவர்கள் சேவையிலிருந்து விலகியவர்களாக இருக்க வேண்டும்.
04. துவிச்சக்கர வண்டி, மோட்டார் வண்டி ஓடக்கூடிய தேகாரோக்கியம் உடையவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
05. வயதெல்லை 20 - 50 வருடங்கள்.

### (1) திட்டமிடல் பணியாளர்: வெற்றிடம் 02

தகைமைகள்
அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றில் முகாமைத்துவப் பட்டம் பெற்றிருக்க வேண்டும். அல்லது பொருளியல், புவியியல், புள்ளி விபரவியல் ஏதாவது ஒன்றில் பட்டம் பெற்றவராகவும், திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், நியதிச் சட்ட சபைகளின் முகாமைத்துவத் தரத்திலான பதவியில் 10 வருடங்களுக்குக் குறையாத முன் அனுபவம் பெற்றிருக்க வேண்டும். அல்லது இவைகட்கு சமமான தகுதியும் அனுபவமும் இருக்க வேண்டும்.

### (2) கணக்காளர் பதவி: வெற்றிடம் 02

தகைமைகள்
பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவனத் தகுதிச்

ஆகிய பாடங்களில் பி (தர) திறமைச் சித்தி உட்பட 05 பாடங்களில் பி (தர) திறமைச் சித்தியுடன் 06 பாடங்களில் சித்தி அல்லது திணைக்களம், கூட்டுத்தாபனம், நியதிச் சட்ட சபைகளில் 10 வருடங்களுக்கு குறையாத முன் அனுபவம் உள்ளவராக இருக்க வேண்டும்.

### (6) தொழில்நுட்ப உத்தியோகத்தர் வெற்றிடம் - 03

தகைமைகள்:-
அ) க. பொ. த. (சாதாரண தரப்) பரீட்சையில் அல்லது சி. பா. த. ப. பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத தடவைகளில் மொழி அல்லது இலக்கியம், கணிதம் மற்றும் விஞ்ஞானப் பாடங்களில் இரண்டில் திறமைச் சித்தியுடன் ஆறு (6) பாடங்களில் சித்தி பெற்றவராக இருக்க வேண்டும்.

அல்லது

ஆ) க. பொ. த. (சாதாரண தர)ப் பரீட்சையில் இரண்டுக்கு மேற்படாத தடவைகளில் முதல்மொழி, கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுடன் மேலும் ஒரு பாடத்தில் பி (தர) திறமைச் சித்தியுடன் ஆறு (06) பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும். அத்துடன் ஏற்றுக் கொள்ளப்பட்ட தொழில் நுட்ப நிறுவனம் ஒன்றில் குறிப்பிட்ட பாட நெறியில் சித்தியடைந்தவராகவும், மேற்படி துறையில் 5 ஆண்டுகளுக்கு குறையாத முன் அனுபவம் உடையவராகவும் இருத்தல் வேண்டும்.

மேற்படி தகைமை ஒன்றுடன் கீழ் குறிப்பிடப்படும் தொழில் நுட்ப சான்றிதழ்களில் ஒன்றுப்பெற்றவராக இருக்க வேண்டும்.
1. தேசிய தொழில் நுட்ப டிப்ளோமா சான்றிகழ்.
2. கனிஷ்ட தொழில் நுட்ப அலுவலர்க்கான சான்றிதழ்.
3. இவைகளை ஒத்த அல்லது அதற்கு மேலான சான்றிதழ்.

### (7) பிரதேச (ஒருங்கிணைப்பு) நிகழ்ச்சித் திட்ட இணைப்பாளர்கள் பதவி வெற்றிடம்: 08

தகைமைகள்;-
க.பொ.த. (சாதாரண தர)ப்பரீட்சையில்

மீளாத்துயில் கொண்ட செய்தி.

தங்களது ஆன்ம சாந்திக்காகவும் தங்களின் பிரிவால் துயருறும் குடும்பத்தினருக்காகவும் எம் பெருமானை வேண்டி இதய அஞ்சலியை அர்ச்சிக்கிறோம்.

பளை நரசிம்ம வைரவ ஆலய
பரிபாலன சபையினர்.

பளை. (8571)

## அஞ்சலிப் பூக்கள் சொரிகின்றோம்



முன்னைநாள் யாழ். பல்கலைக் கழகத் துணைவேந்தரும்; பல்கலைக்கழகமட்டம்வரையில் கடல்வளத்தைப் பாடமாக்க உதவி, கடற்றொழிலாளர் நலன்களைப் பேணி வளர்க்கும் விருப்பும் கொண்டவருமான

பேராசான்

### அமரர் அ. துரைராசா

அவர்களின் மறைவினை யொட்டி அன்னாருக்கு எமது இதயம் நிறைந்த கண்ணீர் அஞ்சலிப் பூக்களைச் சொரிகின்றோம்.

- கடற்றொழிலாளர் ஒன்றியம்
வடமராட்சி வடக்கு.

(8572)

### கூட்டம்

தெல்லிப்பழைக் கல்விக் கோட்டப் பாடசாலைகளில் கடமையாற்றும் அதிபர்களுக்கான கூட்டம் நாளை பி. ப. 2.00 மணிக்கு மருதனார்மடத்தில் இயங்கும் யா/ தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடைபெறும். சகல அதிபர்களும் தவறாது சமூகந்தரும்படி கோட்டப் பிரதிக்கல்விப் பணிப்பாளர் திரு. த. துரைசிங்கம் கேட்டுள்ளார்.

### விபரம் சேகரிப்பு

1990 ஆம் ஆண்டு முதல் 1993 ஆம் ஆண்டு வரையில் பாடசாலைகளில் சேவையாற்றிய பயிலுநர் ஆசிரியர்கள் பற்றிய விபரங்கள் கேட்கப்பட்டுள்ளன.

மேற்குறித்த நான்கு வருட காலப்பகுதியில் ஒவ்வொரு பயிலுநர் ஆசிரியர்களும் பாடசாலைக்கு வராத நாட்கள் பற்றிய எண்ணிக்கை விபரங்கள் மாகாண சபையினால் கேட்கப்பட்டுள்ளது.

பாடசாலை ஆசிரியர்கள் பெயர் முகவரி, கற்பிக்கும் பாடசாலை என்பன மேலதிகமான விபரங்களாக கேட்கப் பட்டுள்ளன. (யோ)

### வெற்றிடம் கோரப்படுகிறது

பாடசாலை ரீதியாகவும் கிராம அலுவலர் ரீதியாகவும் ஆசிரியர்கள் வெற்றிடம் கோரப்படுகிறது.

இதற்கான சுற்றுநிருபம் ஒன்று சகல கல்விக் கோட்டங்களுக்கும் கிடைத்துள்ளன. கல்வி அமைச்சு இது பற்றித் தெரிவிக்கையில்,

அழகியற்கலை, தொழில் நுட்பப் பாடங்கள், விவசாயம், மனையியல், கணிதம், விஞ்ஞானம் ஆகிய பாடங்களுக்குரிய ஆசிரியர் வெற்றிடங்களே கோரப்படுகின்றன. (யோ)

**தகைமைகள்**

பட்டயம் பெற்ற கணக்காளர் நிறுவனத் தகுதிச் சான்றிதழ் பரீட்சை அல்லது ஆகு செலவு முகாமைக் கணக்காளர் நிறுவன தேர்ச்சி சித்தி.

அல்லது

இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி கணக்கியல் டிப்ளோமா அல்லது சமமான தகைமைகளுடன் திணைக்கள, கூட்டுத்தாபன, நியதிச்சட்ட சபைகளின் கணக்காளராக / உள்ளகக் கணக்குப் பரிசோதனைப் பதவியில் 5 வருடங்களுக்கு குறையாத முன் அனுபவம் அல்லது இவைகட்கு ஒத்த நிறுவனத்தில் 10 வருடக் கணக்காளர் பதவிக்கான அனுபவம் உள்ளவராக இருக்க வேண்டும்.

வயதெல்லை 30 - 45 வருடங்கள்

### (3) கணக்காய்வாளர் (வெளிக்கள) பதவி: வெற்றிடம் 03

**தகைமைகள்:-**

க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் தோற்றி 4 பாடங்களில் சித்தி எய்தியவராக இருக்க வேண்டும். அல்லது க. பொ. த. சாதாரண தரப் பரீட்சையில் தோற்றி வர்த்தகம், கணக்கியல் உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன், 06 பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும். அத்துடன் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனங்களில் மூன்று வருடங்களுக்குக் குறையாத அனுபவம் பெற்றிருக்க வேண்டும்.

### (4) கணக்குப் பதிவாளர் பதவி: வெற்றிடம் 02

**தகைமைகள்-:**

இலங்கைத் தொழில் நுட்பக் கல்லூரி கணக்கியல் டிப்ளோமா அல்லது ஐக்கிய இராச்சிய சர்வதேசக் கணக்கியல் டிப்ளோமா சான்றிதழ் பெற்றிருக்க வேண்டும். அல்லது க. பொ. த. உயர்தரப் பரீட்சையில் தோற்றி கணக்கியலில் பி (சித்தி) தரத்திற்குக் குறையாமலும், வர்த்தக பாடத்தில் சி தரத்திற்குக் குறையாமலும் இருக்க வேண்டும். அல்லது இவைகட்கு சமமான தகுதியும் முன் அனுபவமும் இருக்க வேண்டும்.

### (5) எழுதுவினைஞர்கள் வெற்றிடம் - 03

**தகைமைகள்:.**

க. பொ. த. சாதாரணதரப் பரீட்சையில் அல்லது சி. பா. த. ப. பரீட்சையில் கணிதம், தமிழ்மொழி திறமைச் சித்தி உட்பட 05 பாடங்களில் ஒரே தடவையில் திறமைச் சித்தி பெற்றிருக்க வேண்டும். அல்லது க. பொ. த. சாதாரண பரீட்சைச் சித்தியுடன், திணைக்களம், கூட்டுத்தாபனம், சட்ட நியதிச் சபைகளில் 5 வருடங்களுக்குக் குறையாத அனுபவம் உள்ளவராக இருக்க வேண்டும்.

அல்லது

தேசியக் கல்விப் பொதுத் தராதரப் பத்திரப் பரீட்சையில் கணிதம், முதல் மொழி, சமூகக் கல்வி

க.பொ.த. (சாதாரண தர)ப் பரீட்சையில் தோற்றி கணிதம், தமிழ், புவியியல் உட்பட நான்கு (04) திறமைச் சித்தியெய்தி இருக்க வேண்டும். அத்துடன் சமூக சேவை நிறுவனங்கள், அரசசார்பற்ற நிறுவனங்களில் சமூக மேம்பாட்டு திட்டங்களை நடைமுறைப்படுத்திய 05 வருடங்களுக்கு குறையாத முன் அனுபவம் இருக்க வேண்டும்.

### (8) சமூக சேவை இணைப்பாளர் பதவி: வெற்றிடம் 01

**தகைமைகள்:-**

க.பொ.த. (உயர்தர)ப் பரீட்சையில் தோற்றி பொருளியியல் உட்பட 03 பாடங்களில் சித்தி பெற்றிருக்க வேண்டும். அத்துடன் சமூக சேவை நிறுவனத்தின் வெளிக்கள உத்தியோகத்தராக கடமையாற்றி 05 வருடங்களுக்கு குறையாத முன் அனுபவம் உள்ளவராக இருக்க வேண்டும். அல்லது மேற்படி தகுதிக்கு குறையாமலும் அதற்கு சமமான தகைமையுடைய சமூக மேம்பாட்டு வெளிக்கள அனுபவம் உடையவராக இருக்க வேண்டும்.

### (9) சுகாதார சேவைகள் இணைப்பாளர் பதவி வெற்றிடம்- 01

**தகைமைகள்**

க பொ. த. (சாதாரண தர)ப் பரீட்சையில் தமிழ் கணிதம், சுகாதாரம் விஞ்ஞானம் உட்பட 04 பாடங்களில் திறமைச் சித்தியுடன் 06 பாடங்களுக்கு குறையாது சித்தியடைந்திருக்க வேண்டும். அத்துடன் சுகாதார சேவைகள் திணைக்களத்தினால் நடாத்தப்பட்ட இறுதிப் பரீட்சையில் சித்தியடைந்தவராகவும் சமூக சேவையில் ஆர்வம் உள்ளவராகவும் இருத்தல் வேண்டும்.

### (10) தமிழ் தட்டெழுத்து சுருக்கெழுத்தாளர் பதவி வெற்றிடம்- 04

**தகைமைகள்;-**

க.பொ.த. (சாதாரண தரப் பரீட்சையில் தோற்றி தமிழ், கணிதம் உட்பட 06 பாடங்களில் சித்தியடைந்திருக்க வேண்டும். அத்துடன் ஏற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனம் ஒன்றில் தமிழ் தட்டெழுத்து, சுருக்கெழுத்து கற்றுத் தேர்ந்த சான்றிதழ்களைப் பெற்றிருப்பதுடன் 2 வருடங்கள் முன் அனுபவம் உடையவராகவும் இருக்க வேண்டும்.

**பொறுப்பாளர்,**
தமிழீழ நிர்வாக சேவை,
கொழும்புததுறை வீதி,
பாண்டியன்தாழ்வு,
தமிழீழம்.

(சி-9698)

 ... Branch Library 

### சிந்தனைக்கு

நாம் பெற்றுக்கொண்டுள்ள அறிவு-அதன் உடனடி எல்லைக்கு அப்பாலும் ஒளி வீசுகிறது.

-ஜான் டிண்டால்


ஈழநாதம்

31, மகேந்திரா வீதி, யாழ்ப்பாணம். 16-06-1994

தொலைபேசி

ஆசிரியபீடம் 025-2839 நிர்வாகபீடம் 2024

தபால் பெட்டி எண். 05


## எரியும் பிரச்சினையில் குளிர்காயும் முயற்சி

ஒன்று இனப்பிரச்சினைக்குத் தீர்வு. மற்றையது விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை. இவை இரண்டும் தென்னிலங்கை அரசியல்வாதிகளுக்கும் அன்றி கொழும்பில் இருந்து கொண்டு அரசியல் நடத்தும் சிலருக்கும் தம்மை மக்கள் மறந்து விடாது இருப்பதற்கு கைகொடுக்கும் அம்சமாக மாறிவிட்டது.

ஏனெனில், இனப்பிரச்சினைத் தீர்வுபற்றியோ அன்றி விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது பற்றியோ வெளிவரும் தகவல்களுக்கு பத்திரிகைகளில் இடைக்கப் பெறும் முக்கியத்துவமே இதற்குக் காரணமாகும். இதேசமயம் இலங்கையில் எரியும் பிரச்சினையாக மாறிவிட்ட இனப்பிரச்சினைக்கும், அதை விடுதலைப்புலிகளுடனேயே பேசித் தீர்க்க வேண்டும் என்ற நிலையும் தவிர்க்க முடியாத யதார்த்தமாகிவிட்ட நிலையில், இவை குறித்து வெளிவரும் தகவல்களுக்கு முக்கியத்துவம் இடைப்பதும் / கொடுப்பதும் தவிர்க்க முடியாததே.

இந்தவகையிலேயே அண்மையில் ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணியின் தலைவரும், வடமேல் மாகாண சபை முதலமைச்சருமான பிரேமச்சந்திரா இனப்பிரச்சினை தொடர்பாகவும், விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்துவது தொடர்பாகவும் வெளியிட்டுள்ள அறிவிப்புக்களும், பத்திரிகைப் பேட்டிகளும் அடங்குகின்றன.

அண்மையில் லங்காதீப பத்திரிகைக்குப் பேட்டியளித்த பிரேமச்சந்திரா, கொழும்பில், விடுதலைப் புலிகளின் விசேட பிரதிநிதியுடன் இனப்பிரச்சினை குறித்து தான் பேச்சுவார்த்தை நடத்தியதாகவும், இது குறித்து ஜனாதிபதி விஜேதுங்காவிற்கு தெரியப்படுத்தியதாகவும் கூறியுள்ளார். மேலும், ஜனாதிபதியிடம் இருந்து சாதகமான பதில் இடைக்கப் பெறும் என நம்புவதாகவும் குறிப்பிட்டுள்ளதோடு, முதற்கட்டப் பேச்சுவார்த்தையின் முழு விபரமும் விடுதலைப் புலிகளின் தலைவர் பிரபாகரனுக்கு அனுப்பப்பட்டுள்ளதாகவும், விரைவில் இரண்டாவது கட்டப் பேச்சுக்கள் இடம்பெறும் என்றும் தெரிவித்தார்.

எவ்வாறேனும் விரைவில் ஐ. தே. கட்சியில் சேர்ந்து கொள்ளவேண்டும் என துடித்துக் கொண்டிருக்கும் பிரேமச்சந்திரா வெளியிட்டுள்ள இக்கருத்துக்களுடன் அரசிற்கு எந்தளவிற்கு பங்குண்டோ இல்லையோ ஆனால், விடுதலைப்புலிகள் தெளிவாக இவ்விவகாரத்திற்கும் தமக்கும் எந்தவிதத் தொடர்பும் இல்லை எனத் தெரிவித்து விட்டனர்.

விடுதலைப் புலிகள் இவ் விவகாரத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தமை ஒருபுறம் இருக்கட்டும், பிரேமச்சந்திராவின்

# என்து பாதுகாப்பு அதிகாரியே தமிழக அரசுக்காக உளவு பார்த்தார்

## தமிழக ஆளுநர் டாக்டர் சென்னா ரெட்டி பேட்டி

(சென்னை)

தமிழக அரச நாட்குறிப்பிலிருந்து எனது படம் நீக்கப்பட்டு விட்டது. அரச விழாக்களில் என்னை திட்டமிட்டு புறக்கணிக்கின்றனர். நான் ரபர் முத்திரை அல்ல எனத் தமிழக ஆளுநர் சென்னா ரெட்டி இந்தியா டுடே சஞ்சிகைக்கு அளித்த பேட்டியில் தெரிவித்துள்ளார்.

கேள்வி: ஜெயலலிதா அரசுடன் உங்கள் உறவு எப்படி உள்ளது?

பதில்: சுமுகமான பேச்சு என்ற கேள்விக்கே இடமில்லை. நானும் ஜெயலலிதாவும் குடியரசு தின கொடி ஏற்று விழாவிலும், சட்ட சபையிலும் ஒன்றாகக் கலந்து கொண்டோம். ஆனால் மாநில முதலமைச்சரும் தலைமைச் செயலரும் குறைந்தபட்சம் செய்ய வேண்டிய பணி என்னவென்றால் மாநில அரசு விவகாரங்களைப் பற்றி ஆளுநரிடம் கூற வேண்டும்.

ஆனால் தமிழகத்தில் ஓர் அமைச்சர் தற்செயலாக என்னை வந்து சந்தித்தாலோ அல்லது எதையாவது என் கவனத்திற்கு கொண்டு வந்தாலோ அவரிடம் இதுபற்றிக் கேள்விகள் கேட்கப்படுகின்றது. ஆளுநரை எந்த அதிகாரியும் பார்க்கக் கூடாது என முதலமைச்சர் அறிவுறுத்தியுள்ளதாக தமிழக அரசின் மூத்த அதிகாரி ஒருவர் என் செயலாளரிடம் கூறியிருந்தார். இது பற்றி ஆளுநர் மாளிகைக்கு வந்த ஜெயலலிதாவிடம் தெரிவித்தேன். ஆனால் அப்படி அதிகாரிகளிடம் தான் எதையும் சொல்லவில்லை என அவர் மறுத்து விட்டார்.

அப்படியானால் உங்கள் தலைமைச் செயலர் அல்லது எனது செயலாளர் பொய் சொல்கின்றார்களா? என நான் கேட்டேன். இதற்குப் பின் எந்த அதிகாரியும் என்னிடம் வருவது இல்லை. கடந்த 9 மாத காலமாக ஜெயலலிதா ஆளுநர் மாளிகைக்கு வந்து என்னிடம் தகவல் எதையும் தெரிவிக்கவில்லை. தலைமைச் செயலாளரும் என்னைப் பார்க்க வரவில்லை ஏனெனில் அவர் அஞ்சுகிறார்.

கேள்வி: ஜெயலலிதாவின் அமைச்சர்கள் தவறான, தகாத வார்த்தையை பயன்படுத்தி உங்களைத் தாக்குகின்றனரே?

பதில்: ஆம். ஆனால் தனிப்பட்ட முறையில் அவர்கள் என்னைச் சந்திக்கும் போது அதை மறுக்கின்றனர். அறிக்கைகள் தம்முடையவை அல்ல எனவும் ஆனால் தமது பெயரில் வெளியிடப்படுவதாகவும் அவர்கள் கூறினர்.

இவ்வாண்டு அரசு டயறியிலிருந்து என்னுடைய படத்தைக் கிழித்து விடும் அளவுக்கு தமிழக அரசு சென்றுவிட்டது.

இந்த டயரியின் இரு நகல்கள் என்னிடம் உள்ளன. ஒன்றில் எனது படம் உள்ளது. இரண்டாவதில் எனது படம் கிழிக்கப்பட்டுள்ளது. இது அரசு ஒன்று செய்யக்கூடிய செயலல்ல. ஒவ்வொரு நடவடிக்கையையும் நான் கண்காணித்து கொண்டுதான் இருக்கின்றேன் ஒவ்வொன்றுக்கும் என்னிடம் பிரதிபலிப்பை எதிர்பார்க்க முடியாது. நடவடிக்கையில் தான் ஈடுபடுவேன்.

கேள்வி: ஆளுனர் மாளிகையில் உளவு பார்க்கப்படுவதாக காங்கிரஸ் கட்சியினர் கூறுகின்றனரே?

பதில்: இது குறித்து என்னிடமும் கூறப்பட்டது. உளவுத்துறை அதிகாரிகளின் தலைவர்கள் தான் இதற்கு பொறுப்பு அவர் தனிப்பட்ட முறையில் இதற்கு காரணமாயின் அவர் ஒரு கிரிமினல் குற்றவாளி உளவு பார்க்கப்பட்டதற்கு அவர் பொறுப்பில்லை என்றால் அது அவரின் செயலற்ற தன்மையை காட்டுகிறது. தனது ஊழியர்களை கட்டுக்குள் வைக்க அவரால் முடியவில்லை எப்படி பார்த்தாலும் இது மோசமான போக்கு.

ஆளுனர் மாளிகையை உளவு பார்த்துள்ளார்கள் என்பது நிச்சயம் என்னுடைய பாதுகாப்பு அதிகாரி (ஏ.டி.சி) எஸ்.கே. சிங் ஆளுனர் மாளிகை தகவல்களை கூற ஒரு ஏஜென்டாக பயன்படுத்தப்பட்டார். அவர் அப்போது சென்னையில் வியாபாரம் கூட செய்தார் மத்திய மாநில உளவு நிறுவனங்கள் இணைந்து மத்திய அரசு அதிகாரிகளுக்கு எதிராக சதிசெய்கிறது. உளவு பார்க்கப்பட்ட தகவல் தெரிந்தவுடன் எனது பாதுகாப்பு அதிகாரி மாற்றப்பட்டுவிட்டார். இன்றும்அவர் சென்னை வந்தால் தமிழக பொலிஸ் ஜீப்பில்தான் போகிறார். அவருக்கு சென்னையில் பங்கீட்டு அட்டை கூட உள்ளது.

கேள்வி: ஆளுனர் மாளிகைக்கு அனுப்பப்படும் கோப்புகள் உடனுக்குடன் திருப்பி அனுப்பி வைக்கப்படுவது இல்லை என்று அ.தி.மு.க. அரசு உங்கள் மீது குற்றம் சாட்டுகின்றதே?

பதில்: நான் வெறும் ரபர் முத்திரை அல்ல. எதில் கையெழுத்து போடுகிறேன் என்பதை தெரிந்துகொள்ள விரும்புகிறேன். ஒரு பைலை கூட என்னால் நிறுத்தி வைக்க முடியவில்லை என்றாலும் எனது எதிர்ப்பை எழுதுகிறேன். அரசியல் சட்டப்படி தாமதப்படுத்த முடியும். பைல்கள் குறித்து அரசிடம் இருந்து அல்லது எனது சொந்த அதிகாரியிடம் இருந்து தகவல் சேகரிப்பேன் நான் ஊமையோ, குருடனோ அல்ல.

கேள்வி: தமிழ்நாட்டிற்கு வரும் மத்திய அமைச்சர்கள் அ.தி.மு.க. அரசால் அவமதிக்கப்படுகிறார்களா?

பதில்: மத்திய உள்துறை அமைச்சர் கடந்த முறை சென்னை வந்த போது எத்தனை பொலிசார் சென்றனர் போதியளவு பொலிசார் போகவில்லை. பொலிஸ் டி.ஜி.பி. போகவில்லை. உயரதிகாரிகள் ஆட்சியாளர்களுக்கு அஞ்சுகின்றனர். மத்திய உள்துறை அமைச்சரை வரவேற்க பொலிஸ் டி.ஜி.பி. ஏன் செல்லக்கூடாது அது அவருடைய கடமை என்பதை உணர வேண்டும்.

கேள்வி: பிரதமர் நரசிம்மராவ் ஜெயலலிதா அரசை கலைப்பாரா? தமிழ்நாடு அரசை கலைக்க செய்ய மாட்டோம் என ராஜேஷ் பைலட் கூறியுள்ளாரே?

பதில்: மாநில அரசை கலைக்க மாட்டோம் என ராஜேஷ்பைலட் கூறவில்லை. சில பத்திரிகைகளில் அப்படி செய்தி வெளியிட்டு இருந்தார்கள் மாநில அரசை தூக்கி எறிவது மட்டுமே மத்திய அரசின் வேலை அல்ல என்று தான் அவர் கூறினார் இந்த அரசு மீது தொடுக்கப்பட்ட புகார்களை முன்னைய ஆளுனர் பீஷ்மநாராயணசிங் அப்படியே வைத்துக் கொண்டார். நான் எல்லா புகார்களையும் அனுப்பி வைத்து இருக்கிறேன்.

கேள்வி: அ.தி.முகவில் இருந்துநீக்கப்பட்டவர்களின் புகலிடமாக ஆளுனர் மாளிகை இருக்கின்றது என ஜெயலலிதா நினைக்கிறாரே?

பதில்: ஜெயலலிதாவினால் பதவி நீக்கம் செய்யப்பட்டவர்கள் என்னை வந்து சந்திக்கின்றனர் இதில் தவறு என்ன? யார் வேண்டுமானாலும் என்னை வந்து சந்திக்கலாம் ஏன் ஜெயலலிதா வேண்டுமானாலும் வந்து என்னை சந்திக்கலாம்.

மூப்பனார் தன்னுடைய ஆதரவாளர்கள் மட்டுமே ஆளுனரை சந்திக்கலாம் என்றும்வாழப்பாடி இராம மூர்த்தி தன்னுடைய குழுவினர் மட்டுமே ஆளுனரை சந்திக்கலாம் என்றும் கட்டளையிட முடியுமா? யாரானாலும் என்னை சந்திக்கலாம். நான் அனைவருக்கும் பொதுவானவர். இதுவரை எந்த நிகழ்ச்சிக்காவது என்னை அழைத்து நான் போகாமல் இருந்ததுண்டா? இந்த அரசு என்னை திட்டமிட்டு புறக்கணித்து வருகிறது. ஒரு ஆளுனர் என்ற முறையில் என்னை எந்த நிகழ்வுக்காவது அழைத்து இருக்கின்றனரா நீங்களே சொல்லுங்கள் என அவர் அப்பேட்டியில் மேலும் தெரிவித்தார்.

## யுத்தத்தை காட்டி அதிகரித்த விலைகள் தேர்தலால் குறைவு

- சு. க. எம். பி கண்டனம்

## மற்றதொகுதி பாடநூல்கள் முடிவு தெரியாத நிலை

(யாழ்ப்பாணம்)

யாழ் கல்வித்திணைக்களத்திற்கு இன்னும் வந்து சேர வேண்டிய இலவச பாடநூல்களின் ஒரு தொகுதி பற்றிய

தேவையான அளவு பாடநூல்கள் பற்றாக்குறை காரணமாக வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகள் இவ் விவகாரத்திற்கு முற்றுப்புள்ளி வைத்தமை ஒருபுறம் இருக்கட்டும், பிரேமச்சந்திராவின் இக்கூற்றில் எந்தளவிற்கு உண்மையுண்டு என பகுத்தறிவு உடைய எவரும் சிந்திக்க வேண்டும். ஏனெனில் கொழும்பில் புலிகளின் விசேட பிரதிநிதிகளுடன் பிரேமச்சந்திரா பேசுவதென்பது அத்துணை சுலபமான காரியமா? அப்பாவித் தமிழ் மக்களையே விடுதலைப் புலிகள் எனச் சிறிலங்கா பொலிசார் துரத்தித் துரத்திப் பிடித்துக் கொண்டிருக்கையில் புலிகளின் பிரதிநிதி பிரேமச்சந்திராவுடன் இரகசியப்பேச்சுவார்த்தை நடத்துவதென்பதுஎவ்வாறு சாத்தியமாக முடியும்? அவ்வாறுதான் பேச்சுவார்த்தை நடத்துவதானாலும், தமது நிலையையே தீர்மானிக்க முடியாமல் தள்ளாட்டம் போடும் பிரேமச்சந்திராவை அவர்கள் ஏன் தேர்ந்தெடுக்க வேண்டும்?

இதேபோன்றே மீண்டும் இனப்பிரச்சினை குறித்து அமைச்சர் தொண்டமானும் அஷ்ரப்பும் பேசத் தொடங்கியதையும் எண்ண வேண்டியுள்ளது. இவ்விருவரின் கூட்டும், பேச்சும் தேர்தல் நெருங்கி வருகின்றது என்பதையே வெளிக்காட்டுகின்றது. இதுவரை இனப்பிரச்சினைக்குத் தீர்வெனத் தனித் திட்டமொன்றை வைத்த அமைச்சர் தொண்டமான் தற்பொழுது அஷ்ரப்புடன் கூட்டுச் சேர்ந்து இனப்பிரச்சினைக்குத் தீர்வுத் திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளனர். இதன் ஒரு கட்டமாக இது குறித்து விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்த ஜனாதிபதியின் அங்கீகாரம் கிடைக்கப்பெற்றால் விரைவில் யாழ்ப்பாணம் சென்று விடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தப் போவதாகத் தொண்டமான் அறிவித்துள்ளார்.

கடந்த சில வாரங்களுக்கு முன்னர் தமிழ்க் குழுக்களுடன் தொண்டமான் பேச்சுவார்த்தை நடத்தியபோது தனது பேரம் பேசும் சக்தியைக் கூட்டிக் கொள்ள தொண்டமான் முனைகின்றார் எனக் கூறிய அஷ்ரப், தற்பொழுது தொண்டமானுடன் இணைந்து அரசியல் நடத்த முற்பட்டது ஒருவகையில் அவர்களைப் பொறுத்து முன்னேற்றகரமானதுமாகவும், தேர்தலில் லாபம் ஈட்டக் கூடியதாகவும் இருக்கலாம். இது கூட்டாக அரசியல் லாபம் தேடும் முயற்சியாகவும் இருக்கலாம். ஆனால், எந்தளவிற்கு இவர்களின் ஆலோசனைகள் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காண உதவும் என்பதே கேள்வியாகும்.

வழமை போலவே தமிழ்மக்களின் அவலத்தில் இவர்கள் தேர்தல் லாபம் ஈட்டவும் அதன் மூலம் அதிகாரத்துடன் சுகபோகம் அனுபவிக்கவுமே முனைகின்றனர். ஆனால், இவற்றில் எந்தளவிற்கு உண்மையுள்ளது. பயன்பாடு உள்ளது என்பதை மக்கள் தாமே பகுத்தறிந்து கொள்ள வேண்டும். அவ்வாறு இல்லாது விட்டால், இவர்கள் அனைவரும் வானத்தை வில்லாய் வளைத்துக் காட்டி விடுவார்கள்.

### - சு. க. எம். பி கண்டனம்

(கொழும்பு)

யுத்தத்தை காரணம் காட்டி பொருள்களின் விலை உயர்வுகளை செய்த அரசு தற்போது தேர்தல் காரணமாக பொருள்களின் விலைகளை குறைக்கின்றது என சுதந்திரக்கட்சி எம். பி நிமால் சிறிபாலா டி சில்வா கூறியுள்ளார்.

பொருட்களின் விலை உயர்வை நாம் முன்பு சுட்டிக்காட்டிய வேளை வடக்கு கிழக்கில் போர் நடப்பதே காரணம் என்று கூறப்பட்டது. தேசிய வருமானத்தின் 25 சதவீதம் போருக்கு செலவாகின்றது எனக் கூறப்பட்டது. ஆனால் தேர்தல் நெருங்கும்போது விலைகள் இப்போது குறைகின்றன. அப்படியானால் இப்போதுபோர் நின்றுவிட்டதா? யுத்தம்தொடர்ந்தும் நடக்கும் போது பொருட்களின் விலைகளை குறைக்க முடியும் என்றால் இவ்வளவுகாலமும் ஏன் பொருட்கள் விலைகள் கூட்டி விற்கப்பட்டன?.

ஜெனரல் கொப்பேகடுவ மரணமானதும் அவரது பாரியாருக்கு 75 ஆயிரம் ரூபா வழங்கப்பட்டது. தேசியப்பட்டியல் எம். பி அமீட் பதவி விலகியதும் மாதம் 25 ஆயிரம் ரூபா வருமானம் பெறக்கூடிய பதவி வழங்கப்பட்டது. நாட்டின் தேசிய வருமானம் இப்படித்தான் வீணாகிறது. யுத்தத்தில் ஈடுபட்டுள்ள படையினருக்கு எந்த வசதியும் செய்து கொடுக்கப்படவில்லை. இதனால் பல படை வீரர்கள் தப்பி ஓடுகின்றனர் எனவும் அவர் கூறினார்.

## ஆயர்கெனத்பெர்னான்டோ மட்டக்களப்பு விஜயம்

(கொழும்பு)

கொழும்பு அங்கிலிக்கன் ஆயர் வண. கெனத்பெர்னான்டோ மட்டக்களப்பிற்கு விஜயம் செய்து சமாதான முயற்சிகள் தொடர்பாக முக்கிய பிரமுகர்களை சந்தித்துப் பேசியதுடன் தமது சபையினால் மேற்கொள்ளப்படவிருக்கும் புனர்வாழ்வுப் பணிகள் பற்றியும் ஆராய்ந்தார்

மட்டக்களப்பில் தங்கியிருக்கும் கெனத்பெர்னான்டோ கொக்கட்டிச்சோலை, அம்பிலாந்துறை, மகிழடித்தீவு ஆகியகிராமங்களுக்கு சென்று சமாதான முயற்சிகள் தொடர்பாக பல முக்கியஸ்தர்களுடனும் கிராம மக்களுடனும் பேசியதாக தெரிய வருகிறது.

## முஸ்லிம் அமைச்சராக இருப்பதை விரும்பவில்லை

### அமைச்சர் ஹமீட் கண்டனம்

(கொழும்பு)

முஸ்லிம் ஒருவர் வெளியுறவு அமைச்சராக இருப்பதை விரும்பாதோரே எனக்கு எதிராக பிரசாரம் செய்கின்றனர் என வெளியுறவு அமைச்சர் ஏ. சி. எஸ். ஹமீட் குற்றஞ் சாட்டியுள்ளார்.

ஐரோப்பிய கமிஷனுடன் உடன்படிக்கையில் கைச்சாத்திடாத விடயத்தை ஒரு சந்தர்ப்பமாக பயன்படுத்தி தனிப்பட்ட முறையில் என்னை கண்டனம் செய்து மாசு படுத்த சிலர் முற்பட்டுள்ளனர் எனவும் அவர் கூறினார்.

## எயிட்ஸின் தாக்கம் கொழும்பில் அதிகம்

(கொழும்பு)

நாட்டில் 6000 பேருக்கு எயிட்ஸ் நோய் பீடித்துள்ளது. இவர்களில் 125 பேர் நோய் முற்றிய நிலையில் உள்ளனர் என தெரியவருகிறது.

இலங்கையில் முதல் எய்ட்ஸ் நோயாளி ஒரு வெளிநாட்டவராவார் 1986 செப்டம்பரில் இவர் கண்டுபிடிக்கப்பட்டார். கொழும்பிலேயே தற்போது அதிக எயிட்ஸ் நோயாளிகள் காணப்படுகின்றனர் இந் நோய் வருடாந்தம் ஆறு சத வீதத்தால் அதிகரிக்கின்றது. அதாவதுமேலும் 200 பேர் இந் நோய்க்கு ஆளாகின்றனர் என வைத்திய நிபுணர் ஒருவர் தெரிவித்தார்.

## சிரட்டைக் கரி உற்பத்தி

யாழ் மாவட்டத்தில் அதிகரித்துள்ள சிரட்டைக்கரிப் பாவனைக்கு ஈடுகொடுக்கும் முகமாக வன்னிப் பெருநிலப்பரப்பில் சிரட்டைக்கரி உற்பத்தி செய்வதற்கான நடவடிக்கைகளை தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனத்தினர் மேற்கொண்டு வருகின்றனர்.

தற்பொழுது யாழ் குடாநாட்டில் ஆக்கிவாயு மற்றும் தேவைக்கான எரிசக்தியாக சிரட்டைக்கரி பயன்படுத்தப்படுவதைத் தொடர்ந்து இதன் விலை தற்போது கிலோ 38/- ரூபா வரை விற்கப்படுகின்றது.

தற்கு இன்னும் வந்து சேர வேண்டிய இலவச பாடநூல்களின் ஒரு தொகுதி பற்றிய முடிவு எதுவும் தெளிவாக இல்லை என அவ்வட்டாரங்கள் தெரிவித்தன

இவ்வருட ஆரம்பத்தில் இலவசப்பாட நூல்கள் பாடசாலைகளுக்கு விநியோகம் செய்யப்பட்டதுஇவற்றில் சில சில பாடசாலைகளுக்கு

## கர்ப்பிணி மரணம்

(வடமராட்சி)

ஐந்து மாதக் கர்ப்பிணி ஒருவர் வயிற்றோட்டத்திற்கு இலக்காகி மரணமானார்.

தும்பளையைச் சேர்ந்த மகேந்திரன் கமலாம்பிகை (வயது 32) என்பவரே இவ்வாறு பரிதாபகரமாக மரணமானவராவார்.

அதிகாலை அவருக்கு திடீர் வயிற்றோட்டம் ஏற்பட்டவுடன் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலைக்கு எடுத்து சென்ற போதிலும் அப்பெண் மரணமானார். (யோ)

## கடைகளில் திருட்டு

(கொழும்புத்துறை)

பருக்தித்துறை மந்திகைப் பகுதியில் கடந்த 10 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நள்ளிரவு வேளை மூன்று கடைகளின் கூரைகளைப் பிரித்து உட்புகுந்த திருடர் கோஷ்டி ஒன்று இரண்டு கடைகளிலிருந்து பெறுமதி மிக்க பல பொருட்களைத் திருடிச்சென்றுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் கடந்த வெள்ளிக்கிழமை நள்ளிரவு மந்திகை அரசினர் ஆஸ்பத்திரிக்கு முன்பாகவும் அருகில் உள்ள பொதுச் சந்தைக்கு சமீபமாக இடம் பெற்றது.

இந்த விடயம் பற்றிக் கடையின் உரிமையாளர்கள் பருத்தித்துறை காவல் துறையில் முறைப்பாடு செய்துள்ளனர். (24)

ணமாக வழங்கப்படவில்லை என தெரிவிக்கப்பட்டது.

எனவே இதற்கான பற்றாக்குறையை நிவர்த்தி செய்யும் முகமாக கல்வியமைச்சிற்கு மேலும் தேவையான இலவச பாட நூல்களை அனுப்பிவைக்கும்படி யாழ் கல்வித்திணைக்களம்கேட்டுக்கொண்டது. இதற்கான முடிவே இன்னமும் தெளிவாக இல்லை என யாழ் கல்வித்திணைக்களம் தெரிவித்துள்ளது.

## புலிகளின் குரல்

### நிகழ்ச்சி நிரல்

**1994.06.16**
**வியாழன் இரவு**

08.01 - சொல்லுங்கள் பார்க்கலாம்
08.10 - உரை -''மனிதர்களின் பெறுமதி''
08.20 - உழைப்போம் உயர்வோம் ''சுண்ணாம்பால் தொடரும் நிர்மான வேலைகள்'' தனி நடிப்பு
08.30 - செய்திகள்
08.40 - ஏட்டிலிருந்து- அயர்லாந்து எண்ணூறு ஆண்டு விடுதலைப்போர் என்ற நூலிலிருந்து -''விவசாயிகளைத் தின்ற ஆடுகள்'' எனும் கட்டுரையின் சில பகுதிகள்
08.50 - மலரும் மொட்டுக்கள்

**1994.06.17**
**வெள்ளி காலை**

07.02 - மாவீரவணக்கம்
07.15 - விடுதலை கானங்கள்
07.30 - செய்திகள்
07.35 - பத்திரிகைச் செய்திகள்
07.40 - விடுதலை கானங்கள் நிகழ்ச்சியின் தொடர்ச்சி.

# பேராசிரியர் துரைராசா புனிதமானவர்; சிறந்த பண்புகள்கொண்ட மனிதர்

## அரசியல் ஆலோசகர் அன்ரன் பாலசிங்கம்

**உண்மை அன்பே குடும்பத்தின் செல்வம்**
**உழைத்து வாழ்வதே முறையானசெல்வம்**

(நமது நிருபர்)

மனித குலத்தின் பண்பாட்டு மரபுகளில் உள்ள சிறந்த பண்புகளைக் கொண்டவராக விளங்கியவர் பேராசிரியர் துரைராசா அவர்கள். இத்தகைய பண்புகளைக் கொண்டு விளங்கிய பேராசிரியரை ஒரு புனிதமானவர் என்று சொன்னால் அது மிகையாகாது. இவர் காலத்தால் அழியாதவர் என விடுதலைப் புலிகள் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம் தெரிவித்தார்.

நேற்று, மறைந்த பேராசிரியர் துரைராசாவின் இறுதிக் கிரியைகளைத் தொடர்ந்து நடைபெற்ற அஞ்சலி நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் உரை நிகழ்த்துகையில், இங்கு ஒரு உன்னதமான மனிதன் உறங்கிக்கொண்டிருக்கிறார். அவர் ஒரு உயர்ந்த மனிதன் மலை போன்ற மனிதன். அவர் பற்றி இங்கே சிற்றுரையில் ஆழமாக, முழுமையாக எடுத்துச் சொல்வது கடினம். பேராசிரியர் துரைராசா பற்றி பலர் பல்வேறு கோணங்களில் பல்வேறு பரிமாணங்களில் உங்களுக்கு எடுத்துக் கூறினார்கள்.

ஆனால் பேராசிரியர் துரைராசா அவர்களுக்கு இன்னுமொரு பரிமாணம் இருக்கிறது. அதைப்பற்றி நான் ஒரு சில வார்த்தைகளை மட்டும் இங்குசொல்ல விரும்புகிறேன். அதுதான் அவரது அரசியல் பரிமாணம். தமிழீழ விடுதலைப் போராட்டத்தில் வெறும் பார்வையாளராக மட்டும் அவர் இருக்கவில்லை. எமது போராட்டத்திற்கு பல வழிகளிலும் பங்களித்திருக்கிறார். தனது அறிவுக்கேற்ற ஆற்றலுக்கேற்ற அளவில் அவரது பங்களிப்பு அமைந்திருக்கிறது. ஒருவகையில் சொல்லப் போனால் அவர் எமது விடுதலை இயக்கத்துக்கு ஒரு ஆலோசகராகவும் இருந்திருக்கிறார். கல்வித் துறையில், பொருளாதாரத்துறையில் மேலும் பல்வேறு வழிகளில் எமக்குக் காலத்துக்குக்காலம் ஆலோசனைகள் வழங்கி வந்திருக்கிறார்.

ஒருதடவை நான் அவரைச் சந்தித்த போது கேட்டேன், யாழ்ப்பாணத்திலுள்ள பிரமுகர்கள் எல்லாம் விமானத்திலும், கப்பலிலும் போய் வருகிறார்கள். நீங்கள் மட்டும் மிகவும் ஆபத்து நிறைந்த மரணப் பொறியாக இருக்கின்ற இந்தக் கிளாலி பாதையால் போகிறீர்களே அது ஏன் என்று கேட்டேன். அப்பொழுது அவர் சொன்னார் கிளாலிப் பயணம் எமது மக்களின் ஒரு போராட்ட வடிவம் அல்லவா? இங்கேயும் எமது போராட்டம் நடக்கிறது. அரசாங்கத்தின் தடையை உடைத்துக் கொண்டு எம் மக்கள் கிளாலியால் போகிறார்கள். இதுவும் ஒரு போராட்டம். நான் அந்த மக்களுடன் ஒன்று சேர்ந்து மக்களுடன் ஒருவனாக இந்தப் போராட்டத்தில் பங்கு பற்ற விரும்புகிறேன் என்று சிரித்தபடி சொன்னார். இதன் மூலம் அவர் எதனைக் கூற முற்பட்டார் என்றால் யாழ்ப்பாணம்முற்றுகையிடப் பட்டுள்ளது. எமது போக்குவரத்து தடை செய்யப்பட்டுள்ளது. யாழ்ப்பாண மக்களின்உறுதிப்பாட்டை உடைப்பதற்கு அரசு முனைந்து வருகிறது. இந்தச் சூழ்நிலையில் கிளாலிப் பயணம், இதை உடைத்துக்கொண்டு எமது மக்கள் அதனூடாகப் போகி

யாகச் சொன்னார். அதாவது அவர் அரசியல் உரிமை என்று சொல்வது சுயநிர்ணய உரிமை, தன்னாட்சியுரிமை, எமது மக்கள் தன்னாட்சி உரிமைக்கு உரித்தானவர்கள். ஒரு தேசிய இனம் என்ற ரீதியில் தம்மைத்தாமே ஆளும் அரசியல் உரிமை பெற்றவர்கள். ஆகவே இந்தப் போராட்டம் நியாயமானது. இந்தப் போராட்டத்தை முன்னெடுத்து நடத்த வேண்டும். இந்தப் போராட்டத்தை முன்னெடுத்து நடத்துகின்ற விடுதலைப் புலிகள் இயக்கத்திற்கு அவர் ஆதரவாக இருந்தார்.

இந்தப் போராட்டத்தில் பல பரிமாணங்களில் அவரது பங்களிப்பு இருந்தது. எமது பொருண்மிய துறையில் பல்வேறு விதமான வேலைத்திட்டங்கள் வெற்றிகரமாக முன்னெடுக்கப்படுவதற்கு அவர் காரணமாக இருந்தார். எமது கல்வித்திட்டம்பற்றிஅவரிடம் ஆலோசனை கேட்டோம்.

எமது தலைவருடன் மிகவும் நெருக்கமாகப் பழகினார். ஆகவே அவர் போராட்டத்திலிருந்து விலகி நிற்கவில்லை. வெறும் பார்வையாளராக இருக்கவில்லை. அவர் தனது கடமைகளையும் செய்து கொண்டு தனது கல்வித்துறையையும் கண்காணித்துக் கொண்டு அதற்கொரு காப்பரணாகவும் இருந்து கொண்டும் எமது அரசியல் போராட்டம் வெற்றி பெற வேண்டும். எமது மக்கள் விடுதலை பெற வேண்டும். இந்தப் போராட்டத்திற்கு தன்னால், தனது திறமையால், தனது ஆற்றலால் எவ்வளவு உதவி செய்யலாம் என்று எண்ணி அதற்கு ஏற்ற முறையில் பல வழிகளில் எமக்கு உதவி செய்திருக்கிறார்.

பேராசிரியர் துரைராசா பற்றி பலர் பல அம்சங்களில் பேசினார்கள். அவரது சிறப்பம்சமாக இருப்பது எளிமை என்று சொன்னார்கள். அது மிகவும் சரியான கணிப்பீடு. ஏனென்று சொன்னால் பேராசிரியர் துரைராசா அவர்கள் சாதாரண மக்களுடனும் சாதாரண மக்களில் ஒருவராகப் பழகிக் கொண்டார். போராட்டத்தில் மக்கள் சுமக்கும் சுமையைத் தானும் சுமக்க விரும்பினார். மக்கள் எத்தகைய துன்பத்தில் ஆழ்ந்து போய் இருக்கிறார்கள். அந்தத் துயரத்தைத் தானும் பகிர்ந்து கொள்ள விரும்பினார்.

இத்தகைய அவரது மனிதாபிமானம், மனித நேயம், மனிதப்பற்று அவரை ஒரு உயர்வான மனிதராக்கியுள்ளது.

அதாவது மனித குலத்தின் பண்பாட்டு மரபுகளில் எது எது சிறந்த பண்புகளாக நாம் கருதுகிறோமோ, அந்தப் பண்புகளின் உதாரணமாக அவர் இருந்தார். ஆகவே அவரை ஒரு புனிதமானவர்என்று சொல்லலாம். அப்படியான ஒரு புனிதமானவர் இங்கு உறங்கிக்கொண்டிருக்கிறார். நித்திய உறக்கத்தில் இருக்கிறார். அவர் காலத்தால் செத்துவிடவில்லை. அவர் சரித்திரமாகிவிட்டார். என்றென்றும் எமது மக்களின்நெஞ்சப்பசுமையில் நிலைத்து நிற்பார் என்றார். (ச)

### அனுமதி

வரத்துச் செய்வோர்களுக்கு இடைஞ்சலாக இருப்பதுடன் துவிச்சக்கர வண்டிகளில் செல்வோரைத் துரத்திச் சென்று கடித்து பல துன்பங்களை விளைவிக்கின்றன.

எனவே வளர்ப்பு நாய்கள் வீதிகளில் திரியும் போது பிடிக்கப்பட்டிருப்பின் அது பற்றி நண்பகல் 12 மணிக்கு முன்னதாக யாழ். மாநகர சபை சுகாதார வைத்திய அதிகாரியின் பணிமனைக்கு அறிவித்து, தண்டனைப் பணத்தைச் செலுத்தித் தமது வளர்ப்பு நாயை மீளப் பெற்றுக்கொள்ளலாம் எனவும் அவர் தெரிவித்துள்ளார். (24)

### ஜே. வி. பியை

காரிகள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

அத்துடன் கொழும்பில் வர்த்தகநடவடிக்கைகளில் ஈடு

# பேராசிரியர் நினைவாக நேற்று பூரண துக்கம்

பேராசிரியர் துரைராசாவின் மறைவையொட்டி நேற்று யாழ். குடா நாட்டில் அனைத்து அலுவல்களும் நிறுத்தி வைக்கப்பட்டன.

குடாநாட்டில் உள்ள அனைத்து வர்த்தக நிறுவனங்கள், அரச, தனியார்துறை அலுவலகங்கள் மற்றும் தொழில் நிறுவனங்கள் ஆகியன உட்பட பாடசாலைகள் கல்வி நிறுவனங்கள் அனைத்தும் நேற்றைய தினம் இயங்கவில்லை இதனால் யாழ் குடாநாடு ஸ்தம்பித நிலையை அடைந்தது. யாழ் நகரம் நேற்று வெறிச்சோடிப் போய் இருந்தது. வீதிகளில்

### பாதுகாப்பு

கொண்டிருக்கும் ஜனாதிபதி டி.பி. விஜேதுங்காவிடம் இவ் விடயங்கள் தொடர்பாக விரைவில் பேச்சுவார்த்தை

### ஆயிரக்கணக்

திரண்டு வந்திருந்தனர்.

இவ்வாறு திரண்டு வந்த மக்கள் பேராசிரியரது பூதவுடலுக்கு மலர்கள் தூவியும், மலர் வளையங்கள் வைத்தும் தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர். பேராசிரியருக்கு அஞ்சலி செலுத்துவதற்காக மக்கள் நீண்ட வரிசையில் காத்திருந்தனர்.

இவற்றைவிட பேராசிரியர் துரைராசாவின் இறுதி யாத்திரையை ஒட்டி யாழ். குடாநாட்டில் உள்ள பல்வேறு அரச, தனியார் நிறுவனங்கள் பொது சன தொண்டர் அமைப்புக்கள் மற்றும் பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள் தமது இரங்கற் செய்திகளைத் தாங்கிய துண்டுப்பிரசுரங்களை பெருமளவில் வெளியிட்டிருந்தன.

### அஞ்சலிக்கூட்டம்

பேராசிரியரின் பூதவுடலுக்கான சமயக்கிரியைகள் நிறைவடைந்ததும் அஞ்சலிக்கூட்டம் ஒன்று நடைபெற்றது. யாழ். பல்கலைக்கழகத்தின் துணைவேந்தர் பேராசிரியர் குணரட்ணம் தலைமையில் நடைபெற்ற அஞ்சலிக்கூட்டத்தில் தமிழீழ விடுதலைப் புலிகளின் அரசியல் ஆலோசகர் திரு. அன்ரன் பாலசிங்கம், பேராசிரியர் சண்முகதாஸ் மற்றும் திரு. ரத்தின சபாபதி, திரு. விக்கினேஸ்வரன், திரு. நடராசா, பல்கலைக்கழக மாணவன் செல்வன் செல்வக்குமார், பேராதனைப் பல்கலைக்கழக மாணவன் செல்வன் பிரதீபன் திரு. சரவணமுத்து ஆகியோர் அஞ்சலி உரை நிகழ்த்தினர். அத்துடன் இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் தயானந்த விஜயசேகராவினால் அனுப்பிவைக்கப்பட்ட அனுதாபச் செய்தியை யாழ். பிராந்திய திறந்த பல்கலைக்கழக இயக்குநர் திரு. ஞானேந்திரன் வாசித்தார்.

### விசேட ஊர்தியில் இறுதி யாத்திரை

அஞ்சலிக்கூட்டம் நிறைவடைந்ததும் நண்பகல் 12.00 மணியளவில் பேராசிரியரது பூதவுடலைத் தாங்கிய பேழை எடுத்துச்செல்லப்பட்டு விசேடமாக அமைக்கப்பட்ட தமிழீழ தேசத்தின் முகப்புத் தோற்றத்தைக் கொண்ட ஊர்தியில் வைக்கப்பட்டதைத் தொடர்ந்து பேராசிரியரது இறுதியாத்திரை ஆரம்பமாகியது பேராசிரியரது பூதவுடலைத் தாங்கிய ஊர்திக்கு முன்னால் விடுதலைப் புலிகளின் மாணவர் அமைப்பினரது 'பான்ட்' வாத்திய அணிவகுப்பு சென்று கொண்டிருந்தது. அதைத் தொடர்ந்து மலர்வளையங்களைத் தாங்கிய மாணவர்கள் வீதியின் இருமருங்கிலும் அணியணியாகச் சென்று கொண்டிருந்தனர். தொடர்ந்து பூதவுடலைத் தாங்கிய ஊர்தி நகர்ந்துகொண்டிருந்தது. இவ்வூர்தியின் பின்னால் பாடசாலை மாணவர்களது 'பான்ட்' வாத்திய அணியொன்றும் சென்றது. இவ் இறுதி யாத்திரையில் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்கள் உட்பட பல கல்விமான்கள், மாணவர்கள், பொது மக்கள் என்று ஆயிரக்கணக்கான மக்கள் கலந்து கொண்டனர். இந்த இறுதி யாத்திரை சென்ற வீதிகளில் எல்லாம் மாணவர்களும், பொதுமக்களும் வீதியோரங்களில் அணிவகுத்து நின்று மலர்கள் சொரிந்து தமது இறுதி அஞ்சலியைச் செலுத்தினர்.

### சிரேஷ்ட புதல்வர் தீ மூட்டினார்

இவ்வாறு நகர்ந்து சென்ற இறுதி ஊர்வலம் வதிரி ஆலங்கட்டை மயானத்தைச் சென்றடைந்தது இந்த மயானத்தைச் சென்றடைந்ததும் ஊர்தியில் இருந்து பேராசிரியரது பூதவுடலைத் தாங்கிய பேழை எடுத்து வரப்பட்டு விசேடமாக அமைக்கப்பட்ட சிதையின் மேல் வைக்கப்பட்டது. இதைத் தொடர்ந்து பேரா

புதல்வன் சிதைக்கு தீமூட்டினார்.

மயானத்தில் வீசிய காற்றின் வேகத்தில் சிதையில் வேகமாக தீப்பற்றியது சுவாலைவிட்டு எரிந்த தீயுடன் பேராசிரியர் துரைராசாவின் பூதவுடல் சங்கமமாகியது மயானத்தில் சூழ்ந்து நின்ற மக்கள் கூட்டத்தினரது மனங்களிலும் பேராசிரியரது பிரிவுத் துயரம் புயலாக வீசியது கண்களைத்துடைத்தவாறு மயானத்தில் இருந்து மெதுவாக அனைவரும் நகர்ந்து சென்றனர். (க)

### முதல் தொகுதி

திருப்பி அனுப்பப்படவுள்ளனர் இவ்வாறு திருப்பி அனுப்பப்படுவோருக்கு தேவைப்படும் பட்சத்தில் நுகேகொடவில் தற்காலிக தங்குமடமொன்றை இலங்கை செஞ்சிலுவைச்சங்கம் அமைக்கவுள்ளது அகதிகளுக்கான ஐக்கிய நாடுகள் உயர்ஸ்தானிகராலயம் கொழும்பிலுள்ள சுவிட்சர்லாந்து தூதுவரகத்திற்கும் இலங்கை செஞ்சிலுவைச்சங்கத்திற்குமிடையே ஒருங்கிணைப்பை மேற்கொள்ளவுள்ளது.

### வீரச்சாவு

### எமது

பிரியாவிடை அளித்தது. இன்று அதே பல்கலைக்கழகமும். அதே யாழ். மாவட்டமும் அவர் மறைவால் மீளாத்துயரில் ஆழ்ந்துள்ளது.

அண்மையில் நான் பேராசிரியர் துரைராசாவை சந்தித்தபோது அவர் தனது நோயைப் பற்றி சற்றும் கவலைப்படாதவராக பல்கலைக்கழகம் பற்றியே என்னுடன் பேசிக் கொண்டிருந்தார். இந்த ரீதியில் அவர் ஒரு அபூர்வமான மனிதர். எந்த விஷயத்தையும் அமைதியாகவும் சரியாகவும் கையாள்வார், பல்கலைக்கழகத்திற்குள்ளும் அதற்கு அப்பாலும் பல திட்டங்களை வகுத்து பல எண்ணக்கருக்களை உருவாக்கி தானே முன்னின்று அவற்றை வளர்த்துவிட்டார். அவர் இங்கு பணியாற்றிய காலம் மிகவும் நெருக்கடியான காலம். இவரது காலத்தில் பல்கலைக்கழகம் மறுமலர்ச்சி பெற்ற காலம் என்று கூறலாம். சிறந்த மாணவர், தலைசிறந்த நிர்வாகி, தலைசிறந்த ஆசிரியர் என்று பல்வேறுபட்ட நிலையிலும் அவர் ஒரு சிறந்த மனிதனாகவே விளங்கினார்.

அத்துடன் எல்லோருடனும் அன்பாகப் பழகி எல்லோரையும் அணுகக் கூடியவராகவும், மனிதநேயமுடையவராகவும் இருந்தார். தனது இனத்திலும். மொழியிலும் பற்றுள்ளவராக இருந்து இனத்தினதும், மொழியினதும் மேம்பாட்டிற்கு அயராது உழைத்தார்.

ஆயினும் தனது இனத்தையும் மொழியையும் நேசிக்கும் ஒருவர் பிற இனத்தையும் பிற மொழியையும் ஒடுக்க வேண்டியதில்லை. ஒடுக்கக்

னர்.

அத்துடன் கொழும்பில்
வர்த்தகநடவடிக்கைகளில் ஈடு
பட்டுள்ள படை அதிகாரிகள்
வடக்கு-கிழக்கு போர் தொட
ருவதை விரும்புவதாகவும்,
அதன் மூலம் பெரும்லாபம்
சம்பாதிப்பதே அவர்களது
குறிக்கோளாக இருப்பதாக
வும் சுட்டிக்காட்டியுள்ள இவ்
அதிகாரிகள் ''ஜே. விபியை
தோற்கடித்தது நாம் செய்து
விட்ட ஒரு தவறு போல இருப்
தாகவும்'' தெரிவித்துள்ளனர்
''ரோகண விஜேவீரவை ஒழி
த்து ஜே.விபியை அடக்கியது
எம்மை சிக்கலுக்குள் தள்ளி
யுள்ளது எனவேதான் இது
விடயத்தில் நாம் வெற்றி
பெற்றது குறித்து நாம் வரு
ந்த வேண்டியுள்ளது'' என்
றும் அவ் அதிகாரிகள் கூறியுள்
ளனர்.

உடைத்துக்கொண்டு எமது
மக்கள் அதனூடாகப் போகி
றார்கள். மரணப் பொறிக்
குள்ளால் போகிறார்கள்.
சாகிறார்கள். ஆகவே அந்தப்
பயணத்தில் தானும் பங்கு
பற்ற வேணும் என்று அவர்
உறுதியாக அந்தப் பாதையூ
டாகப் போய் வந்தார்.

அதை ஒரு போராட்ட
நிகழ்வாக அவர் எடுத்துக்
கொண்டார். இப்படியான
முறையில் வித்தியாசமாகச்
சிந்தித்த ஒருவர். அவர் அடிக்
கடி எமது மக்களின் அரசியல்
உரிமைகள் பற்றிக்குரல் எழுப்
புவார். ஒரு அரசியல் உரிமை
என்றால் என்ன?

சமீபத்தில் எமது தலைவர்
வழங்கிய கௌரவ விருந்து
ஒன்றில் பேசிய அவர் சில
கருத்துக்களை வெளிப்படை

விடயங்களை தொடர்பாக
விரைவில் பேச்சுவார்த்தை
நடத்தப்படவிருப்பதாகவும்
பாதுசாப்பு இராஜாங்கஅமை
ச்சராக ஒருவரை நியமிக்கும்
படி கோரிக்கை விடப்பட
இருப்பதாகவும் சில உயர்
அதிகாரிகள் கூறியிருப்பதாக
ஐலண்ட் பத்திரிகை செய்தி
வெளியிட்டுள்ளது.

இதே வேளை சிவில் நிர்
வாக அதிகாரியின் கீழோ அல்
லது ஓய்வு பெற்ற அதிகாரி
களின் வழிகாட்டுதலின்
கீழோ விடுதலைப்புலிகளுடன்
போரிட முடியாது என்றும்
சில வட்டாரங்கள் சுட்டிக்
காட்டியுள்ளன.

நகரம் நேற்று வெறிச்சோடிப்
போய் இருந்தது. வீதிகளில்
மக்களின் நடமாட்டம்மிகவும்
குறைவாக இருந்தது. நகரத்
துக்கும் புறநகர்ப்பகுதிகளுக்கு
மிடையிலான பஸ்போக்குவர
த்தும் நடைபெறவில்லை

யாழ் நகரம் உட்பட குடா
நாட்டின் அனைத்துப் பகுதி
களிலும் உள்ள வீதிகள்
தோறும் கறுப்புக் கொடிகள்
பறக்கவிடப்பட்டிருந்தது' அத்
துடன் தோரணங்களும் வீதி
யோரங்களில் கட்டப்பட்டிரு
ந்தன. வீதிகளில் செல்லும்
வாகனங்களும் கறுப்புக்
கொடிகளைத் தாங்கிய வண்
ணம்சென்றுகொண்டிருந்தன.

## வீரச்சாவு

மோதலில் வீரச்சாவு அடை
ந்தவராவார்.

திருகோணமலை மாவட்
டம் மூதூர் பகுதியில் கடந்த
12-ம் திகதி இரவு9. 45 மணி
யளவில் ஏற்பட்ட விபத்தின்
போது 2-ம் லெப். ஆனந்தன்
(இரத்தினவடிவேல் சிறிபாபு
திருகோணமலை) என்னும்
போராளி வீரச்சாவடைந்
தார்.

இவ் இருபோராளிகளுக்கும்
தமிழீழ விடுதலைப்புலிகள்
தமது வீரவணக்கத்தைத்
தெரிவித்துக் கொள்கின்ற
னர்.

யின் மேல் வைக்கப்பட்டது.
இதைத் தொடர்ந்து பேரா
சிரியருக்கு இறுதி மரியாதை
செலுத்தும வகையில்
''பான்ட்'' வாத்தியங்கள்
முழங்கின மயானத்தில் கூடி
யிருந்த மக்கள் அனைவரும்
தமது இறுதி நிமிட அஞ்ச
லியைச்செலுத்தினர்.

தொடர்ந்து உரிய முறைப்
படி பேராசிரியரது சிரேஷ்ட

## உற்ற

பிட்டுள்ளார். நேற்று நடை
பெற்ற அஞ்சலிக் கூட்டத்தில்
வாசிக்கப்பட்ட அவரது அனு
தாபச் செய்தியில் மேலும்

அன்னாரின் அறிவியல் வல்
லமை, அன்பான அனுபவரீதி
யான ஆலோசனைகள்,
நாட்டிற்குப் புரிந்த சேவை
கள், கல்விக்காக அயராது
உழைத்தமை எல்லாம் சகல
ரும் அறிந்ததே. திறந்த பல்க
லைக்கழகத்தின் யாழ்ப்பாண
பிராந்திய நிலையத்தை முன்
னேற்றுவதற்கு அன்னார்
எடுத்த அயராத முயற்சிக
ளால் நானும் எனது சக ஊழி
யர்களும் பெரிதும் ஊக்குவிக்
கப்பட்டோம் எனவும் தெரி
விக்கப்பட்டுள்ளது.

## வடக்கு

ஈடுபடுவதாகவும் அவர் தெரி
வித்தார்.

சமாதானத் தீர்வைத் தரு
வதற்கு அரசாங்கம் காலம்
தாழ்த்துமாயின், சுயாட்சிக்
கான அனைத்து அம்சங்களும்
ஆரம்பிக்கப்பட்டுவிடும் என்
றும், நீதித்துறை, காவல்
துறை, வங்கி எனப் பல
அமைப்புக்கள் ஏற்கனவே
துவக்கப்பட்டு விட்டது என்
றும் கூறியுள்ளார்.

இலங்கையின் அரசியல் சட்
டப்படி ஜனாதிபதி பதவிக்
கான தேர்தல் நாடு முழுவ
தும் ஒரே நேரத்தில் நடத்
தப்பட வேண்டும் என்பதால்
விடுதலைப் புலிகளின் இந்த
அறிவிப்பு மிகுந்த முக்கியத்
துவம் வாய்ந்ததாக அரசியல்
வட்டாரங்களில் கருதப்படு
கின்றது.

பிற மொழியையும் ஒடுக்க
வேண்டியதில்லை. ஒடுக்கக்
கூடாது என்ற உயர்ந்த
கோட்பாட்டிற்கு அமைபவே
செயற்பட்டார். அதனால்
தான் சிங்கள மாணவர்கா
கூட-அவருடன் பழகிய சிங்
கள மக்களும் கூட அவர் மீது
பேரன்பும், பெருமதிப்பும்
வைத்திருந்தனர். இவரது
இழப்பு அவரது குடும்பத்திற்
குமட்டும் ஏற்பட்டதல்ல. பல்
கலைக்கழகத்திறகும் எமது
சமுதாயத்திற்கும் ஏற்பட்ட
பேரிழப்பாகும் என்றார்.

## புலிகளுடன்

வேண்டும பேச்சுவார்த்தை
யின் போது முன்வைக்கப்பட
வுள்ள கோரிக்கைகள் குறித்து
அரசாங்கத்திற்கு அறிவிக்க
வேண்டும் சிறிலங்காவின்
பதிவு செய்யப்பட்ட கட்சிகள்
அனைத்தும் பேச்சுவார்த்தை
களில் ஈடுபடும் விடுதலைப்
புலிகளின் தலைவர் பிரபா
கரன் நேரடியாக பேச்சுவா
ர்த்தைகளில் கலந்து கொள்ள
வேண்டும் என்ற நான்கு
நிபந்தனைகளையும் நிறைவு
செய்ய வேண்டும் எனவும்
அவர் கூறினார்.

இதனை ஜனாதிபதியின்
செயலாளர் விஜேதாச தம்மி
டம் திட்டவட்டமாக தெரி
வித்ததாகவும்அவர்கூறினார்.

## தமிழ் விழா

யாழ். வைத்தீஸ்வராக் கல்
லூரியின் தமிழ்ப் பேரவையி
னர் நடாத்தும் தமிழ் விழா
இன்று காலை 9. 00 மணிக்கு
கல்லூரி மண்டபத்தில் நடை
பெறவுள்ளது. பிரதம விருந்
தினராக யாழ். பல்கலைக்
கழக முதுநிலை விரிவுரையா
ளர் கலாநிதி நா. சுப்ரமணி
யன் அவர்களும் சிறப்பு விருந்
தினர்களாக கலாநிதி காரை
செ. சுந்தரம்பிள்ளை அவர்க
ளும் ஓய்வு பெற்ற ஆசிரியர்
திரு. எஸ். சரவணமுத்து
அவர்களும் கலந்துகொள்கின்
றனர். மாணவர்களின் கலை
நிகழ்ச்சிகளும் இடம்பெறுகின்
றன.


யாழ். ஸ்ரீதரில்

இன்று மட்டும்

G/ME OF DEATH

மாலை 4 மணி, 6 மணி

நாளை முதல்

ARNOLD SCHWARZENEGGER

நடித்த

PREDATOR

தினசரி மாலை 4, 6 மணி

சனி, ஞாயிறு

காலை 10-30, 4, 6 மணி

(9809)



16 - 06 - 94 இன்று காலை 10.27 மணிக்கு

மங்களகரமான திறப்பு விழா



சிவராதா

புடைவையகம்



சேட்டிங், சூட்டிங், ஜப்பானிய இந்
திய சாரிகள், ரெடிமேட் ஆடை
கள், சிறுவர்களுக்கான ஆடை
களுக்கு என்றும உங்கள்
சேவைக்கு

★ சிவராதா புடைவையகம் ★

163, பெரியகடை பஜார்.
மலாயன் கபே அருகாமை,
யாழ்ப்பாணம்.

(8576)



இப்பத்திரிகை யாழ்ப்பாணம் மகேந்திரா வீதி 31 ஆம் இலக்கத்திலுள்ள ஈழநாதம் பணிமனையில் 1994 ஆம் ஆண்டு ஜூன் மாதம் 16 ஆம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.